திருச்சிற்றம்பலம்

மாற்றறி யாத
செழும்பசும் பொன்னே
மாணிக்க மேசுடர்
வண்ணக் கொழுந்தே
கூற்றறி யாத
பெருந்தவ ருள்ளக்
கோயிலி ருந்த
குணப்பெருங் குன்றே
வேற்றறி யாதசிற்
றம்பலக் கனியே
விச்சையில் வல்லவர்
மெச்சும் விருந்தே
சாற்றறி யாதவென்
சாற்றுங் களித்தாய்
தனிநட ராசஎன்
சற்குரு மணியே

—திருவருட்பா

அண்ணன், தம்பி இருவர். ஒருவர் ஆத்திகர். இன்னொருவர் நாத்திகர். நாத்திக அண்ணன் எப்படி ஆத்திகராக மாறினார்?



ரா. குப்புசாமி பி.ஏ.,

தம்பி தாம் செய்த அற்புதம்!

சத்தியபுரி என்னும் சிவக்ஷேத்திரத்தில் கதிரவனின் ஒளிக்கதிர்கள் ஒடுங்கி மேற்குத் திசையில் மறைந்து கொண்டே இருந்தன. அனவரதமும் அஸ்தமனக் காலத்தில் சிவலிங்கம் பிரசாரம் செய்ய வழக்கம்போல் ஆரம்பித்து விட்டார் வழக்கமான இடத்திலே. அப்பிரசாரத்தைக் கேட்க அங்கு மக்கள் குழுமியிருந்தனர். அவர், ''கடவுள் இல்லை'' என்னும் தத்துவத்தைப் போதிக்கத் தன்னால் இயன்ற வரைக்கும் முயன்று வந்தார். ஏகக் கைத் தட்டலும், கரகோஷமும் கரை புரண்டன. ஆரவாரம் உச்சத்தை எட்டியது.

இத்தகைய நாத்திகருக்கு ஒரு தம்பி இருந்தார். அவர் ஒரு தீவிர ஆத்திகர். அவர் திருநாமம் ராமலிங்கம் என்பதாகும். மறுதினம், அவர் தன் அண்ணன் பிரசாரம் செய்த இடத்திற்குச் சென்று உபந்நியாசம் செய்ய ஆரம்பித்தார். அப்புனித யாத்திக அவை முழுவதும் ஆரவாரம்! பக்தியின் பெருமையைப் பற்றியும் கடவுளின் பெருமையைப் பற்றியும் கடவுள் சர்வவியாபி என்பதைப் பற்றியும் கடவுள் சர்வ வல்லமையுள்ளவர் என்பதைப் பற்றியும் ''இறைவன் வெளியில் வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றும் வரையில் அஞ்ஞானமே நிறைந்து இருக்கிறது. இறைவனைத் தன் உள்ளத்திலே நேராகக் காண்பவனே ஞானியாவான்'' என்றும் அவர் அறிவுறுத்தி வந்தார். அப்படிப்பட்ட அவையில் அநேகர்கூட்டங்கூட்டமாய் இருந்ததில் அணுவளவேனும் ஆச்சரியமே யில்லை.

சிவலிங்கம் அன்றைய மாலையில் சூரிய அஸ்தமனத்திற்குப் பின் நாத்திகப் பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டார். என்றும் இல்லாத, தேர்த் திருநாள் கூட்டம் அவர் பேசிய விதம், ஆழ்ந்த ஆத்திகர்களையும் வெறி பிடித்த நாத்திகர்களாக்கும் தன்மை வாய்ந்ததாக இருந்தது.

பிரசாரம் முடிந்தவுடன், அனைவரும் அதிசயம் அடையும் வண்ணம் அவர் ஒரு நற்காரியம் செய்தார். தான் செய்யும் காரியம் எத்தனை நன்மை பயக்கும் என்பதை அவர் எள்ளளவும் எண்ணவே இல்லை. தன் தம்பி, ராமலிங்கத்திற்கு ஒரு நல்ல பாடம் உடனே கற்பிக்க வேண்

டும் என்ற நோக்கத்தால் உந்தப் பட்டு, அவர் ஒரு கரும்பலகை யில் தனக்குத் தெரிந்த ஆங்கிலத் தில், ''God is no where'' என்று எழுதினர். அதைக் கண்டு அனை வரும் அதிசயித்தனர்.

அந்த நாத்திகர் செய்த பூர்வீக புண்ணிய வசத்தாலோ, கடவுளின் கிருபையாலோ, ஆக்ஞையாலோ என்னவோ, எக்காரணத்தாலோ அக்கரும் பலகை, மறுநாள் காலை வரைக் கும் கலைக்கப்படாமலும், கள வாடப்படாமலும் இருந்தது! மறுநாள் காலை. வழக்கம்போல் ராமலிங்கம் உபதேசம் செய் தார். எதிர்பாராத விதமாய், அன்றையச் சொற்பொழிவிற்கு அவரது அண்ணன் சிவலிங்கம் வந்திருந்தார். தான் செய்த காரியம் மிகவும் பொருத்த மானது என்று எண்ணி இறு மாந்து இருக்கையில் இருந்தார். அன்றைய அவரது தம்பியின் சொற்பொழிவு மற்றையத்தினங் களைவிட அதிக ஆற்றலையும் ஆவலையும் ஆரவாரத்தையும் ஆத்திரத்தையும் கொண்டிருந் தது. அவ்வார வாரத்தைப் பொறுக்காமல் அக்கூட்டத்தி லிருந்து அவர் தமையன் சிவலிங் கம் ஆக்ரோஷத்துடன் எழுந்து, ''ஏய் மடையா!'' என ஆரம் பித்தார். அனைவரது திகைப்பி னூடே அவர் தன் பேச்சைத் துவக்கினர். ''நான் 'God is no where' என்று எழுதியிருக்கிறேன் கற்பலகையிலே. இன்னுமா உனக்குப் புத்தி வரவில்லை?'' என்று சரமாரி பொழிந்தார்.

நிதானமாகவும் நிம்மதியாக வும் எழுந்தார் ராமலிங்கம். அண்ணனிடத்தில் அதிக மரி யாதையுடன் பேசினர். ''அண்ணா!'' என அன்புடன் ஆரம்பித்தார். ''உங்களுக்கும் உம் சகாக்களுக்கும் நீர் எழுதி யது 'God is no where' என்று இருக்கலாம். ஆனால் எங்களுக்கு நீர் எழுதியது எப்படிஇருக்கிறது தெரியுமா? 'God is now here' என்று இருக்கிறது!'' என பலத்த கரகோஷத்தினிடையே கூறினர்!

தமையன் தலை குனிந் தது வெட்கத்தின் முழுமையால். கண்கள் கண்ணீர்க் குளங்கள் ஆயின. உடனே கண்ணீர் அருவி பாய ஓடிச் சென்று, தன் தம்பி ராமலிங்கத்தின் காலில் சாஷ் டாங்கமாகத் தெண்டனிட்டார். ஆனல் தம்பி அதைக் கிஞ்சித் தேனும் ஏற்றுக்கொள்ளாமல் தடுத்து நிறுத்தினர். தன் அண் ணனைவிட எத்துணை அறிவும், தெய்வ பக்தியும், படிப்பும் பெற் றிருப்பினும் தம்பி தம்பிதானே!

அந்தத் தருணத்திலிருந்து, சிவ லிங்கம் தன் அஞ்ஞான இருளி லிருந்து விலகி, ஞானப்பிரகாசத் தில் நுழைந்து, ஞானத்தைச் சிறுகச் சிறுகப் பருகத் தொடங் கினர். 'கடவுள் இருக்கிறார்' என்னும் அரிய, தூய உண் மையை உணர்ந்து, தெய்வ பக்தி யில் திகழ்ந்து, சில ஆண்டுகளுக் குப் பின் தீவிர ஆத்திகராகவும், அறிவாளியாகவும், பக்தராக வும், ஞானியாகவும் விளங்கினர்.

தான் செய்த தவறு, அத்த கைய தனிப்பெரும் பரிசைத் தரும் என்றோ, அப்பேர்ப்பட்ட அற்புதத்தை விளைவிக்கும் என்றோ, சிவலிங்கம் எள்ளளவும் எண்ணினரா? இல்லவே இல்லை.

ஆகையால், 'கடவுள்' என் பவர் சர்வவியாபி, சர்வ அந்தர் யாமி, கல்யாண குணங்கள் சர்வ மும் கொண்டவர் என்று மன மார உணரவேண்டும். ''அவன் அன்றி ஓர் அணுவும் அசை யாது'' என்னும் முதுமொழியை முற்றும் உணரவேண்டும். இவ் வுலகில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியும் கடவுளின் திருவுளப் படியே நடைபெறுகின்றது.

நெல்லை வி. மனோகரன்

மாணவர்களே! படித்து மேதைகளாகுங்கள்!

முன்ஜனாதிபதி டாக்டர் இராதா கிருட்டிணன் அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது மாணவர்களுடைய ஒழுங்கீனத்தைப் பற்றி மிகவும் கவலையுடன் கூறியுள்ளார். அதாவது மாணவர்கள் நம் நாட்டின் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் மதிக்காமல் மனம்போன போக்கினில் தவறான பாதையில் நடக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுவதைப்போல் நாம் நடக்கின்றோமா? ஆம், என்றுதான் சொல்ல வேண்டும். இவ்வாறுதான் மாணவர்களுடைய சமீப நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

நாம், நம்முடைய நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்திடம் வற்புறுத்தி எடுத்துரைத்துத் தகுந்த முறையில் நியாயம் பெற வேண்டும். இதுதான் நம்கடமை. ஆனால் இன்று இந்த நிமிடம் வரை நடப்பதென்ன? மாணவர்களுடைய அட்டகாசம், இரகளை, ஒரு தொத்து நோய்போல் ஒவ்வொரு இராஜ்யமாகப் பரவி வருவதைத்தான் பார்க்கிறோம். காலையில் செய்தித் தாளிலும் இதைத்தான் பார்க்கிறோம். நாம் நம்முடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்ல ஊர்வலம் நடத்தி வன்முறைச் செயல்களில் இறங்க ஆரம்பித்து விடுகிறோம். இவை சரிதானா? இல்லையா? என்று நாம் சிறிது சிந்தித்துப் பார்க்க வேண்டும். இதற்கு மாணவர்களைக் கைப்பாவையாகப் பயன்படுத்தி, அரசியல் இலாபம் சம்பாதிக்க நினைக்கும் அரசியல் சூதாடிகள், காலிகள் முதலியோர் உதவுகின்றனர். அந்தக் கயவர்களும் நம்முடன் சேர்ந்து நாச வேலையில் ஈடுபடுகின்றனர் எனத் தெரிந்தவுடன்

தற்கால மாணவர்களின் போக்குத் தவறான பாதையில் போகிறது. அவர்கள் திருந்த வேண்டாமா?

நாம் நம் போராட்டத்தை வாபஸ் பெற வேண்டும். அது தான் புத்திசாலியின் செயல். ஆனால் நாமும் அவர்களுடன் சேர்ந்து கல்லெறிதல், தீயிடுதல் போன்ற நாச வேலைகளில் நாம் ஈடுபட்டு நம்'தரத்தையே தாழ்த்திக் கொள்ளுகின்றோம்.

நாம் கல்லெறியும் போலீஸார்களையும், போலீஸ் அதிகாரிகளைகளையும்பற்றி ஒரு விநாடி சிந்தித்தால் அவர்கள் நம் உயிரையும், நம் உடைமைகளையும் அரசாங்க உடைமைகளையும் பாதுகாக்க நியமிக்கப்பட்ட நம் ஊழியர்களே என்பதை அறிவோம். நாம் தீ இடும் பொருள்களை அரசாங்கத்தின் உடைமை என நினைத்துக் கொளுத்துகிறோம். ஆனால் அவை உண்மையில் நம் பொருள்கள் என உணர மறந்து விடுகிறோம்.

இவைகளையெல்லாம்மீறிக் கும்பல் உணர்ச்சி (Mob Feeling)ஏற்படும் போது வன்முறைச் செயல்கள் தலைதூக்குகின்றன. இதைத் தடுக்கவே போலீசார் அமைதியை நிலைநாட்டவும், பொதுமக்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவும் சட்டப்படி நடவடிக்கை எடுக்க நேருகிறது. மாணவர் நடவடிக்கைகளில் சில அரசியல் கட்சிகளும் சேர்ந்து ரௌடித்தனங்களும், நாச வேலைகளும் செய்துவிட்டுப் பின், எங்களுக்கும் மாணவர்களுடைய போராட்டத்திற்கும் சம்பந்தமே கிடையாது என அறிக்கை விடும் அரசியல் கட்சிகள் இருக்கும்வரை மாணவர்கள் எவ்விதப் போராட்டிலும் அவர்களுடைய தூண்டுதலின் பேரில் இறங்கக்கூடாது. இந்த இழிச்செயலை 1965 ல் நடந்த மாணவர் கிளர்ச்சியின் போது கண்கூடாகக் கண்டோம். மாணவர்களுடைய சங்கம் தன் விருப்பம்போல் செயல் பட வேண்டுமே அன்றி எடுப்பார் கைப்பிள்ளையாக இருக்கக் கூடாது.

அந்தக் காலத்திலும் மாணவர்களுடைய போராட்டங்களில் வன்முறைச் செயல்கள் நடந்தனவே என்று சொன்னாலும், அன்றையச் சூழ்நிலை வேறு, இன்றையச் சூழ்நிலை வேறு. அன்றைய மாணவர்கள் அடிமை இந்தியாவில் வாழ்ந்தனர். இன்று நாம் சுதந்திரப் பறவைப்போல் சுதந்திர இந்தியாவின் மாணவர்களாவோம். எனவே, நம் கோரிக்கைகளை நியாயமான முறையில் தான் வற்புறுத்த வேண்டும்.

மாணவர்களுடைய நலனில் அக்கறை கொண்ட ஒரு தலைவர், ''எந்தக் காரணத்திற்காகவும், எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சி வசப்பட்டுக்கூட அரசியலில் ஈடுபட்டுவிடாதீர்கள் என்று மாணவர்களுக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் உங்கள் வேலையைக்கவனியுங்கள். கவனமாகப் படியுங்கள். படித்து முன்னேறுங்கள். பல கலைகளிலும் மேதைகளாகுங்கள். நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலை உங்கள் காலத்திலாவது ஏற்பட்டாக வேண்டும். படிப்பை இடையில் கெடுக்கும் எந்தக் காரியத்திலும் தலையிடாதீர்கள். சின்ன பிரச்னைதானே என்று விளையாட்டாகத் துவங்கும் வேடிக்கைகளும் விளையாட்டுகளும்கூடப் பல சமயம், சமுதாயத்தையே பாழ்படுத்தும் அளவுக்கு விபரீதமாகத் திரும்பிவிடலாம். கவனமாகப் படியுங்கள்'' என்று கூறினார்.

எனவே, நாம் வீண் சச்சரவுகளில் ஈடுபடாமல், நம் தாய்த் திருநாட்டை எதிரிகளிடம் இருந்து பாதுகாத்து, நவ இந்தியாவை நிருமாணிக்கும் சிற்பிகளாக மாறுவோம் என ஒரு சிறந்த உறுதியை மேற்கொள்வோமாக.

—சுடர்



சொல்லுக் கடங்கிடான் சோர்வுறும் நெஞ்செனும்
கல்லைப் பிசைந்து கனியெனச் செய்வான்,
சொத்தினுள் சொத்தவன், சுகத்திற் சுகமவன்,
வித்தினுள் வித்தவன், வேழ முகத்தனின்
தம்பியாய் வந்தவன், தன்னையே சரணென
நம்பிவந் தவரை நாடியே அணைவான்
நெஞ்சினிற் புகுந்து நிலைத்திருந் திடுவான்,
கொஞ்சுவான், கொஞ்சிக் குலவுவான், தீய
எண்ண மெழுந்தால் இதய வீட்டை
நண்ணிடேன் என்பான், நல்லவே எண்ணத்
தூண்டுவான், நீங்காத் துணையா யிருப்பான்,
ஈண்டொரு துயரம் எதிர்ப் படுமாகில்
வேலொளி காட்டி விலக்கி அருள்வான்,
''ஞாலந் தனிலோர் ஞான பண்டிதா,
முருகா முருகா முருகா''—என்றே
உருகுவோர் நெஞ்சில் ஒளி மயமாகி
அருள் வழித் தொழுகும் குறுநகை புரிவான்,
கருதியே உருகுவான் கண்ணீர்க் காடாய்
மாற்றுவான், மகிழ்வான், மாயை
மாற்றவே வருவான் மயிலில் ஏறியே!

வருவான் மயிலில் ஏறியே!

திருமதி சௌந்தரம் கைலாசம்

அருட்பெருஞ்ஜோதி ஆட்சி வரவேண்டும்

இந்தக் காலத்தில் உலகமெங்கும் பட்டினி, பஞ்சம். நோய், வறுமைதாம் மேலோங்கி நிற்கின்றன. குறிப்பாக நம் நாட்டிலே வட இந்தியா முழுமையும் தற்போது மக்களைப் பட்டினி பற்றி வாட்டுகின்றன. பீகார் மாகாணத்தில் மட்டும் 2 கோடி மக்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டனர். உத்திரப் பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம், குஜராத் முதலிய மாகாணங்களிலும் இந்த நிலைதான் அடிக்கடி ஏற்படுகின்றது. மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலும் உணவு பற்றாக்குறைத் திண்டாட்டம் ஒரு பெரும் பிரச்னையாகிவிட்டது. இந்நிலையை மாற்றுவது எங்ஙனம், எப்பொழுது, எவரால் என்று சிந்திக்கவேண்டியதாயுள்ளது. இதற்கு என்ன காரணம் என்று சற்று ஆராய்வோம். குறைபாடு மக்களிடமா, அரசாங்கத்திடம் அல்லது இயற்கையின் மாறுபாட்டமா? விஞ்ஞான வளர்ச்சி பெருகி உள்ள இந்தக் காலத்தில் இந்நிலையை மாற்ற அறிஞர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை ஆராய்வோம்.

நம்நாடு சுதந்திரம் பெற்ற பிறகு தொழில் வளர்ச்சியில் பெருகிக் கொண்டே வருகிறது. இயந்திரசாலைகள், தொழிற்சாலைகள், ஆலைகள் பலப்பல நிறுவப்பட்டு வருகின்றன. இதுவரை விவசாயத்தில் ஈடுபட்டிருந்த சிலர் இவைகளில் சேர்ந்து தங்கள் வருமானத்தையும், அந்தஸ்தையும் உயர்த்திக் கொண்டே வருகின்றனர். தொழிற்சாலைகள் பெருகி விட்டதால் விவசாயம் நடத்தப் போதிய ஆட்கள் கிடைக்கவில்லை என்று கூறுகின்றார்கள். அரசாங்கத்தினர் தக்க காலத்தில் விவசாயத்திற்கு வேண்டிய உதவிகளைச் செய்வதில்லை என்றும், விவசாயக் கருவிகள், எருக்கள், பூச்சி மருந்துகள் இவைகளின் விலைகள் அபாரமாக உயர்ந்ததுமன்றித் தக்க காலத்தில் கிடைப்பதுமில்லை என்றும் கூறுகின்றார்கள்.

மற்றும் சிலர் அநீதி மிகுதியாகிவிட்டது. அக்கிரமச் செயல்கள் பெருகிவிட்டன. ஆகையினால்தான் கால மழையும் பெய்வதில்லை, பஞ்சமும் பட்டினியும் நோயும் பெருகி

இந்தக் காலத்தில் ஏன் எங்கும்
துக்கக் குரல்கள் கேட்கின்றன?
அவை எழாமல் இருக்க சன்மார்க்க
ஆட்சி தான் அமையவேண்டும்.

விட்டன என்று சொல்கின்றூர்கள். சில சமயங்களில் மழை பெருத்த அளவில் பெய்து, வெள்ளத்தால் பயிர் வகைகளை அழித்து விடுகிறது. ஆனுல் உண்மைதான் என்ன என்று பார்க்கும்போது இவற்றுக்கெல்லாம் காரணங்கள் நான்கு என்று எமக்குத் தோன்றுகிறது.

(1) மனிதன் முன்போல் உழைத்து வேலே செய்யச் சுணங்குகின்றுன். தேவையற்ற நாகரிகத்தில் ஆழ்ந்துவிட்டான். காப்பி, டீ, புகை முதலிய அவசியமில்லாப் பழக்கங்களைப் பற்றிக்கொண்டான். ஊர்கள் சுற்றுவதும், சினிமாவே இன்பமெனக் கருதுவதும், புறம் பேசி வம்புகளில் ஈடுபடுவதிலும் இறங்கிவிட்டான். இந்நிலேயில் எப்படி விவசாயம் ஓங்கி வளர முடியும்?

(2) முன்பெல்லாம் இயற்கை எருவுகளிட்டுப் பயிரிடுவார்கள். ஆனுல் இப்பொழுது செயற்கை உரங்களேயே அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். சுலபமாக இலாபம் சம்பாதிக்கலாம் என்ற நோக்கத்தோடும், சோம்பல் தனத்தாலுமே இப்படிச் செய்கின்றனர். செயற்கை உரங்கள் நிலத்திலுள்ள சத்தை அதிகப்படியாக உறிஞ்சி விடுகிறது. நாளடைவில் நிலம் சத்தற்றதாகி விடுகின்றது. சரீரத்தில் பலமும், ஆரோக்கியமும் குன்றுமாயின் ஒரு தனி போஷிப்பு மருந்து அதாவது டானிக் என்னும் முறையில் மனிதன் சாப்பிடுகின்றுன். இதை ஒரு சிறிய அளவில்தான் சாப்பிட வேண்டும். இதற்குப் பெருத்த முறையில் நல்ல உணவருந்த வேண்டும். அதுபோலவே ரசாயன எருக்கள் யாவும் நிலத்துக்கும், பயிருக்கும் ஒருவகை டானிக் எனக் கருதிப் பெருத்த அளவில் அல்லது சமபாதி அளவிலாவது இயற்கை எருவிட வேண்டும். ஆனுல் எங்கே இவ்வாறு மனிதன் நடத்துகின்றுன்?

(3) 30 ஆண்டுகளுக்கு முன்பு பயிரை அழிக்கும் பூச்சிகள் என்ற பேச்சே தென்னிந்தியாவில் இல்லாமலிருந்தது. ஆனுல் இப்போது எங்குப் பார்த்தாலும் பயிரைப் பூச்சிகள் அழித்து விடுகின்றன என்ற பேச்சாகவே உள்ளது. இயற்கை எருவிடாமல் செயற்கை உரங்களே உபயோகிப்பதுதான் இதற்கெல்லாம் காரணமென்று சில விவசாய நிபுணர்கள் கருதுகின்றூர்கள்.

(4) முன்பெல்லாம் ஆண்டவனே நினைத்து அவனருளே நாடி விதைகள் விதைப்பார்கள். அந்த வழக்கம் இப்போது அடியோடு கைவிடப்பட்டுள்ளது. மனிதன் எல்லாவற்றையும் தன் சக்தியினுலேயே சாதித்துவிடலாம் என்ற முடிவுக்கு வந்து விட்டான் போலும்! பயிர் விளேவதும் பலிதம் மிகக் கிடைப்பதும் ஆண்டவன் அருளால்தான். ஆனுல் இந்தக் காலத்தில் இதை யார் நினைக்கிறூர்கள்?

(5) இவைகள் எல்லாவற்றையும்விட வியாபாரிகள் மனப்பான்மை மாறியுள்ளது. அதிக இலாபம் கொள்ளே

அடிக்க வேண்டுமென்று கல்லும் மண்ணும் கலந்த உணவுப் பொருள்களை விற்பதுமன்றி, விலைகளை உயர்த்திப் பொருள் களைப் பதுக்கி மனசாட்சி என்பதையே மண்மூடிப் புதைத்து விட்டு, எத்தனை உயிர்கள் இறந்தாலும் இரக்கமென்பதே சிறிதளவும் கொள்ளாமல்—பணம், பணம் என்ற முறையில் குறிக்கோளை அமைத்துள்ளார்கள். அரசாங்கமோ அவல நிலையில் அமைந்துள்ளது. ஆட்சி முறையை நடத்துபவர் களும் அதில் சம்பந்தப்பட்ட சிப்பந்திகளும் தக்க உற்சாகக் குறையினாலோ, தயவு தாட்சண்யத்தின் நிமிதத்தினாலோ, இலஞ்சப் பேயின் பிடிப்பினாலோ மேற் கூறிய முறைகளை மாற்ற முடியாத முறையில் அமைத்துள்ளார்கள் போலும்! என் செய்வது! இதன் விளைவுதான் பஞ்சம், வறுமை, பட்டினி, நோய்! இதை மாற்றி அமைக்கப் பொது மக்கள் தாம் தீர்ப்பளிக்க வேண்டும்.

தேர்தல் காலங்களில் உங்கள் வாக்குரிமையைச் செயல் படுத்தும்போது சன்மார்க்கிகளுக்கே, சுயநலம் கருதாத தியாக புருஷர்களுக்கே, பொதுச் சேவையே தங்கள் வாழ்க்கையின் இலட்சியம் என்ற குறிக் கோள்களைக் கொண்டுள்ளவர்களுக்கே — உங்கள் வாக் குரிமையைத் தந்து, நகரசபை, சட்டமன்றம் பாராளு மன்றம், பஞ்சாயத்துக் குழுக்கள் முதலானவை களுக்குத் தங்கள் பிரதிநிதிகளெனத் தேர்ந்தெடுத்தனுப்புங் கள். கட்சி, கட்சி என்னும் பட்சபாத பிசாசை விரட்டி வீழ்த்துங்கள். அப்போதுதான் சன்மார்க்க ஆட்சி, நன் மார்க்க ஆட்சி, தெருள் நயந்த நல்லோர் நினைத்ததெலாம் பெருப்படியான அருள் நயந்த நல்லோர்கள் ஆட்சியாக அருட்பெருஞ்சோதி ஆண்டவனருளால் ஏற்படுத்த இயலும். அன்பர்களே, சன்மார்க்க ஆட்சி அமையச் சிந்தித்துச் செயல் படுங்கள். அனைவரும் இன்புற்று வாழ ஆண்டவனை வேண்டுங்கள்.

— 'அருட்பெருஞ்ஜோதி'

எடுத்த செயல் எளிதில் முடியவேண்டும் என்றே அனைவரும் ஆசைகொள்வர். அந்த ஆசையை நிறை செய்து தருபவர் பிள்ளைப் பெருமான் ஆவார்.

கணபதி இன்று எல்லாருடைய கவனத்தையும்கவர்ந்திருக்கிறார். நம்நாட்டில் தெய்வ வழிபாடு கணபதியிலிருந்துதான் தொடங்குகிறது. ஆகவே சமயப் பயிற்சியாகிய கடவுள் வணக்கம் கணபதி வணக்கத்தை அடிநிலையாகக் கொண்டது.

தெய்வ நம்பிக்கை யுடையவர்களாகிய நாம் எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்காமல் தொடங்குவதில்லை. நன்மையிற் பிள்ளையார், தீமையிற் பிள்ளையார். இவ்வண்ணம நமது வாழ்வில் என்றும் எங்கும் பிள்ளையார் கலந்திருக்கிறார்.

எடுத்த காரியம் எளிதாக, இன்பமயமாக முடியவேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்த ஆசையை நிறைவேற்றி வைக்குங் கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை ஒவ்வொருவர் உள்ளத்திலும் நிலைத்திருக்கிறது.

ஏடுகளில் எழுதத் தொடங்கினாலும், கல்லில் எழுத்துக்களை வெட்டத் தொடங்கினாலும், காகிதங்களில் எழுதத் தொடங்கினாலும் பிள்ளையார் சுழியை முன்னர் இட்டே தொடங்குவது மரபு.

பிள்ளையார் சுழி மூல மனுவாகிய பிரணவத்தின் சிதைந்த வடிவே என்பதும், உயிரும் இறையும் சிவமும் சக்தியும் ஒன்றாகக் கலந்துள்ள நிலையைக் காட்டும் அடையாளமாம் என்பதும், இதனை எழுதுவதன் வாயிலாக ஆன்மாக்கள் தற்போதங் கெட்டுப் பதிஞானம் வரப் பெறுகின்றனர் என்பதும், அந் நிலையில் இயற்றப்பெறுஞ் செயல்கள் யாவும் சிவன் செயலேயாக விளக்கம் பெறும் என்பதும் உணர்த்தப் பெற்றன.

விநாயகர் திருமேனி ஞானமே வடிவானது, அவருடைய கரசரணாதி அவயங்கள்: திருவடி, பெருவயிறு, ஐங்கரம், கொம்புகள், தாழ்செவி, முக்கண், பிறைமுடி, மும்மதம், சர்ப்பாபரணம், யானை முகம்.

கணபதி: 'க' — போதல்; அதாவது ஞானநெறியில் எழுதல் என்பது பொருள். 'ந' மோட்சம். பதி—பரம்பொருள். அதாவது ஞானநெறியில் நின்று எய்தப் பெறும் பரம்பொருள் என்பது பொருள். கணேசர் என்பதும் இப்பொருளதே.

பிள்ளையார் **வகைகள்:** பால கணபதி, தருண கணபதி, பக்தி கணபதி, வீர கணபதி, சத்தி

பிள்ளையார்

கணபதி, துவிஜ கணபதி, சித்தி கணபதி, உச்சிஷ்ட கணபதி. வேறு வகை: விக்ன கணபதி, க்ஷிப்ர கணபதி, ஏரம்ப கணபதி, லட்சுமி கணபதி, மஹா கணபதி, விஜய கணபதி, நிருத்த கணபதி, ஊர்த்துவ கணபதி, ஏகாட்சர கணபதி, வரகணபதி, கிரயாக்ஷர கணபதி, க்ஷிப்ரபிரசாத கணபதி, ஹரித்ரா கணபதி, ஏகதந்த கணபதி, சிருஷ்டி கணபதி, உத்தண்ட கணபதி, ரணமோசன கணபதி, துண்டி கணபதி, துவிமுக கணபதி, மும்முக கணபதி, சிங்க கணபதி, யோக கணபதி, துர்க்கா கணபதி, சங்கடஹர கணபதி.

மூஷிக வாகன வரலாறு: இந்திர சபையில் வாமதேவரை அவமதித்த கிரௌஞ்சன் என்னும் கந்தருவன் அவர் சாபத்தால் பெரிய எலியாயினன். பராசர முனிவரின் ஆச்சிரமத்தைப் பாழ்படுத்தினன். பராசரர், விநாயகரை வேண்டிக்கொண்டார். விநாயகர் ஆகுவாகிய அதனை வாகனமாக்கொண்டு அடக்கியாண்டார்.

விருப்பமான பூக்களும் இலைகளும்: விநாயகருக்கு அறுகும், வன்னிப் பத்திரங்களும், மந்தாரைப்பூவும் மிகச் சிறந்தன. தாழம்பூ, துளசி, இவைகளால் விநாயகரைப் பூசித்தலாகாது. சாதாரணமாகச் சிவபூசைக்கு உகந்ததான எல்லாப் பத்திர புஷ்பங்களும் விநாயகர் வழிபாட்டிற்கும் ஏற்றவையே.

சங்கற்பம்: எந்தக்காரியத்தைத் தொடங்கினாலும் இறைவன் திருவருளை முன்னிட்டு, இன்ன நன்மைக்காக, இன்னாருடைய விருப்பத்தின் பொருட்டுத் தொடங்குகின்றேன் என்று உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்வண்ணம் எண்ணித் துணிதலே சங்கற்பம். 'எண்ணித்துணிக கருமம்' என்பர் வள்ளுவர். அங்கனமே பிள்ளையார் பூசையைத் தொடங்கும் போதும்,

''இன்னின்ன வருட, மாச, பக்ஷ, திதி, நக்ஷத்திர, யோக, கரணங்களோடு கூடிய இன்ன நாளில் என் குடும்ப நன்மைக்காக அறம், பொருள், இன்பம், வீடு இவைகளைப் பெருதற்காக வெற்றி, நலம், ஆயுள், வீரம் இவை வளர்தற்காக விநாயகரை விதிப்படி பூசிக்கின்றேன்'' என்று சங்கற்பம் செய்துக் கொள்ளுதல் வேண்டும்.

அபிடேகம்: சந்தனாதித் தைலம், மாப்பொடி, மஞ்சள் பொடி, திரவியப்பொடி, பஞ்சகவ்யம், ரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாபமிர்தம், நெய், பால், தயிர், தேன், கருப்பஞ்சாறு, பழரசங்கள், இளநீர், சந்தனம், ஸ்நபனம், சங்கம் இந்த முறையில் அபிடேகம் செய்வித்தல் வேண்டும்.

நிவேதனப் பொருள்கள்: மக்கள் உண்ணக் கூடிய உயர்ந்த பொருள்கள் எல்லாம் இறைவனுக்கும் உகந்தனவே. விநாயகருக்கு உகந்த நிவேதனப் பொருள்கள்: தேங்காய், வெல்லப், எள்ளுருண்டை, அப்பம், அவல், வாழைக்கனி, மாங்கனி, பலாக்கனி முதலியன. பயறுவகைகள், கனி வகைகள், கிழங்கு வகைகள் எல்லாம் விநாயகருக்கு உகந்தவையே எனத் தக்கயாகபரணி கூறுகின்றது. 'கடலை பயிரேடு' என்ற திருப்புகழில் அப்பம், அமுது, அவரை, அவல், இளநீர், எள்ளுருண்டை, கடலைக்கா யுருண்டை, கரும்பு, கற்கண்டு, வள்ளிக்கிழங்கு, சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், மிளகு சாதம், (சம்பா) சுகியன், திணைமா, துவரைப் புழுக்கல், தேன், நெய், பச்சரிசி, வெல்லம்,

மிளகு, பணியாரம், பயறு, பருப்பு, முப்பழம் பாகு, பால் பிட்டு, பொரி, மா, லட்டு, வடை, வெண்ணெய், வெள்ளரிக்காய், வெள்ளரிப்பழம், விளாம் பழம், நாவற்பழம முதலிய உணவு வகைகள் உகந்தனவாகக் குறிக்கப் பெறுகின்றன.

எல்லாரும் எப்போதும் செய்யக் கூடிய வழிபாடு :

கஜமுகன், தன்னுட்சியில் தேவர்களையெல்லாம் அடக்கியாண்டு, அவர்கள் தன்னைக் கண்டபோது தலையிற் குட்டிக் கொள்ள வேண்டும் என்றும், தோப்புக்கரணம் போடவேண்டும் என்றும் வற்புறுத்தி வந்தான். அவனை விநாயகர் வென்றதும் தேவர்கள் அந்த நன்றியறிதலைத் தெரிவிக்க ''நாங்களும் பெருமானுகிய தங்களைக் காணும்போதெல்லாம் அந்த இரு வழிபாடுகளையும் சேர்க்கிறேம். விருப்பத்துடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்'' என்று வேண்டிக்கொண்டார்கள். அது முதல் அவை அனைவரும் செய்யக் கூடிய உகந்த வழிபாடாக ஆயின.

விநாயக சதுர்த்தி :

இது ஆவணி மாதத்துச் சுக்கில பக்ஷத்தில் வருகிற சதுர்த்தியிலே விநாயகரைப் பூசனை விதிப்படி வழிபட்டு, பகலில் ஒரு வேளையுண்டு, இரவில் பால் அல்லது பழம் மட்டும் சாப்பிட்டுக் கொண்டுஅநுட்டிக்கப்பெறுவது. இரவில் சந்திரனைப் பார்க்கவே கூடாது. ஆனுல் விநாயக பூசையின் இறுதியில் சந்திரனைப் பூசித்தல்மட்டும் அவசியம். இவ்விரத காலத்தில் விநாயகரை அர்ச்சிக்க வேண்டிய பத்திரங்கள்: பாசிப் பச்சை, கையாந்தகரை, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, வன்னி, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணு கரந்தை, மாதுளை, தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, பாதிரி, அறுகு என்ற இருபத்தொன்று என்று புட்பவிதி கூறுகின்றது

ஒரு மாதம் வரை பூசை அநுட்டிக்க வேண்டும். முப்பது நாளும் அநுட்டிக்க முடியாதவர்கள் விநாயக சதுர்த்தி யன்று மட்டுமாவது விதி பிறழாமல் அநுட்டிப்பது அவசியம்.

பிள்ளையார் ஆயுதங்கள்: பாசம், அங்குசம், தந்தம், வேதாளம், சக்தி, அம்பு, வில், சக்கரம், கத்தி, கேடயம், சம்மட்டி, கதை, நாகபாசம், சூலம் குந்தாலி, மழு, கொடி, கண்டம், கமண்டலம், பரசு, கரும்புவில், சங்கம், புஷ்பபாணம், கேடரி, அக்ஷமாலை, சாமரம், கட்டுவாங்கம், தீ அகல், வீணை.

செபிக்கும் முறை: சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன்னமேயே நித்திரையை விட்டு எழுந்து, நாட்கடன்களை முடித்துக்கொண்டு, குளிர்ந்த நீரில் முழுகி, நன்கு தோய்த்துலர்ந்த ஆடைகளையேனும், பட்டையேனும் உடுத்திக்கொண்டு, நல்ல முகூர்த்தத்திலே, நல்ல இடத்திலே அமர்ந்து செபிக்கத் தொடங்குதல் வேண்டும்.

★

பெண்குலத்துக்குரிய முதன்மையான பெருமை, அது தாய்க் குலம் என்பதேயாகும்.

இறைவன் இவ்வுலகத்தைப் படைப்பதே, தாய்க்குலத்தின் துணை கொண்டுதான். தாய்க் குலம் இல்லாவிட்டால், உலகில் உயிர்களே தோன்றமுடியாது என்பது உறுதி.

ஆனால் இன்றையப்பெண்மணிகள் தமக்குரிய இந்தப் பெருஞ் சிறப்பை நினைப்பது இல்லை. தங்களது பெருமை அனைத்தும் தமது உடலழகிலும் ஆடை அணிகலன்களிலும் மட்டுமே அடங்கியிருப்பதாக அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தவறான எண்ணம் எவ்வளவு தடிப்பேறிப் போயிருக்கிறதோ, அந்த அளவுக்கு அவர்கள் உள்ளத்தில் தாய்மையின் பண்பும் குறைந்துபோய்விடுகிறது. தாய்மைப் பண்பு குறையக் குறைய, அவர்களுக்குரிய இயல்பான பெருமையும்இறங்கிக்கொண்டே வருகிறது.

தாய்மையின் முதற்பணி மக்கட்பேறேயாகும். பண்டைக் காலத்தில் நன்மக்கள் பிறக்க வேண்டும் என்று பெண்கள் நோன்புகள் நோற்றிருக்கிறார்கள் திருமணம் புரிந்துகொள்வதே நாட்டுக்கு உயர்வளிக்கவல்ல நன்மக்களைத் தோற்றுவிப்பதற்காகத்தான் எனக் கருதப்பட்ட காலம் அது. ஆனால் இந்தக் காலத்தில் மக்களை வேண்டி மணம் புரிந்துகொள்வதில்லை. இன்பத்தை வேண்டித்தான் மணம் புரிந்துகொள்கிறார்கள். அந்த இன்பம் மட்டும் வேண்டும், குழந்தைகள் வேண்டாம் என்ற கொள்கையுடையவர்களாயிருக்கிறார்கள். ஆனால் குழந்தைகளை அப்படி வெறுக்க, அவர்கட்குக் குழந்தைகளே நிறையப் பிறக்கின்றன! குழந்தைகள் வேண்டுமென்று பெண்கள் தம் கணவன்மாருடன் காசி இராமேசுவரம்போய்வந்துகொண்டிருந்த அந்தப் பழைய காலத்தில், குழந்தைகள் இப்படி வதவதவென்று பிறக்கவில்லை. இப்போது குடும்பம் ஒன்றுக்குச்சராசரி அரைடஜனுக்குக் குறைவில்லாமல், ஒரு டஜன், ஒன்றரை டஜன் வரையிலும்கூடப் பிறக்கின்றன!

இந்தக் காலத்துத் தாயர்கள் பெற்ற பிள்ளையைக் காட்டிலும் தம் இளமை அழகுதான் முக்கியம் என்று எண்ணுகிறார்களே!

இப்படிக் குழந்தைகள் பிறந்துகொண்டே போனால் உலகமே தாங்காது என்று புள்ளி விவர நிபுணர்கள் சொல்லும் அளவுக்கு வந்துவிட்டது!

இதன் விளைவாகக் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், கருத்தடை அறுவைகள் எல்லாம் வழக்கில் பெருகி வருகின்றன. 'நாம் எங்கே கருவுற்றுவிடப் போகிறோமோ!' என்று ஒவ்வொரு பெண்ணும் அடிக்கடி திகிலடைந்து கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. இதுவா பெண்மையின் இலக்கணம்?

தாய்ப் பால் ஊட்டத் தயங்கலாமா?

குழந்தைகள் இப்படி அளவுக்கு மிஞ்சிப் பிறப்பதற்குக் காரணம் என்ன?

இதில் ஒரு முதன்மையான மனோதத்துவ உண்மை அடங்கி இருக்கிறது.

அதாவது,

நாம் எந்தப் பொருளை இடையறாது எண்ணி எண்ணி அஞ்சிக் கொண்டிருக்கிறோமோ, அந்தப் பொருள் தானாகவே நம்மைத் தேடி வந்து அடையும்!

நாம் ஒருபொருளை எவ்வளவுக்கெவ்வளவு மிகுதியாக வெறுக்கிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு மிகுதியாக அது நம்மை வந்து அடையும்!

நம்முடைய வெறுப்பும் அச்சமுமே அவற்றிற்குரிய பொருள்களை நம்மை நோக்கி ஈர்த்துக் கொண்டு வருகின்றன.

எது நடக்கக் கூடாதென்று நாம் அல்லும் பகலும் நடுங்கிக் கொண்டிருக்கிறோமோ, அது கண்டிப்பாக நடந்தே தீரும்!

இதுதான் நவீன மனோதத்துவ விஞ்ஞானிகளின் கோட்பாடு. இதை ஆங்கிலத்தில், "fear attracts the object of fear" என்று சொல்லுவார்கள். இதன்படி, ஒரு பெண்ணானவள் தனக்குக் குழந்தைகள் பிறந்துவிடுமோ என்று அஞ்சிக்கொண்டிருக்கும் வரையில் அவளுக்குக் குழந்தைகள் பிறந்துகொண்டேதான் இருக்கும். அந்த அச்சத்தை விட்டொழிக்கும் போதுதான் அவளுக்குக் குழந்தைகளும் பிறக்காமல் நிற்கும்.

மணமாகாத காதலர்கள் தமக்குக் குழந்தைகள் பிறந்துவிடக் கூடாதே என அஞ்சுகிறார்கள். பெண்ணின் உள்ளத்தில் அந்த அச்சம் தீவிரமாக இருக்கும் போது அவளுக்குக் கருத்தரித்து விடுகிறது.

எனவே, பெண்களுக்கு நிரம்பக் குழந்தைகள் பிறக்காதிருக்க வேண்டுமானால், அவர்கள் குழந்தைகளைப் பற்றிய அச்சத்தை விட்டொழிக்க வேண்டும். குடும்பக் கட்டுப்பாட்டுக்கு அறுவை மருத்துவம் செய்துகொள்வதைக் காட்டிலும் இதுவே சிறப்பான வழியாகும்.

ஆனால், மணமான இளம் பெண்கள் ஏன் குழந்தைகளைக் கண்டு பயப்படுகிறார்கள்?

குழந்தை பிறந்துவிட்டால் தம்முடைய இளமையின் எழில் மறைந்துவிடுமே என்ற கவலை தான் இதற்குக் காரணமாகும். அந்த எழில் மறையாதிருப்பதற்காக, அவர்கள் தாம் ஈன்றெடுத்த குழந்தைகளுக்கே இனிய தாய்ப் பால் ஊட்டத் தயங்குகிறார்கள்!

பெற்ற பிள்ளையைக் காட்டிலும் தமது மேனி அழகுதான் முதன்மையானது என்று கருதுகிறார்கள் இன்றையப் பெண்மணிகள். இப்படிப் பாசமற்றுப்போன ஒரு தாயின் மீது பிள்ளைக்கு மட்டும் எப்படி அன்பு சுரக்கும்? அதனால்தான் இந்தக் காலத்துப் பிள்ளைகள் தம் பெற்றோரிடத்தில் அவ்வளவு பற்றில்லாதவர்களாய்க் காணப்படுகிறார்கள்.


தாய்ப்பால் என்பது குழந்தைகளுக்கென்றே இறைவனால் படைக்கப்பட்ட ஓர் இன்னமுதமாகும். செயற்கை முறையில் தயாரிக்கப்படும் புட்டிப்பால்கள் அதற்கு எந்த வகையிலும் ஈடாக மாட்டா. பசுவின்பால்கூடத் தாய்ப்பாலுக்கு இணையாகமாட்டாது. ஏனென்றால் பசுவின் பாலானது பசுவின் கன்றுகளுக்காகவே பசுவின் உடலில் உண்டாக்கப்படுவது. பசுவின் கன்றுகளின் வளர்ச்சிக்கு வேண்டிய பொருள்கள்தாம் அதிலிருக்

குமே தவிர, மனிதக் குழந்தைகளின் வளர்ச்சிக்குரிய சத்துக்கள் அதில் இருக்கமுடியாது.

மனிதக் குழந்தைகளுக்கு உடல் வளர்ச்சியோடுகூட மூளை வளர்ச்சி முதன்மையானது. கன்றுக்குட்டிகளுக்கு அப்படி இல்லை. ஆகையால் கன்றுக்குட்டிகளின் தாய்ப்பாலை உண்டு வளருகிற மனிதக் குழந்தைகளும், கன்றுக்குட்டிகளைப் போலவே மூளையுடையவர்களாயிருப்பதைத் தவிர வேறுவழியில்லை!

அண்மையில் விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். அதாவது, தாய்ப்பால் ஊட்டாத தாய்மார்களுக்கு மார்பில் புற்றுநோய் தோன்றக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று அவர்கள் சொல்லுகிறார்கள்! இந்த உண்மை தெரிந்தால் இனிமேல் எந்தப் பெண்மணியாவது தன் குழந்தைக்குத் தாய்ப்பால் ஊட்டத் தயங்குவாளா!

முக நகை கொண்ட மூவர்



1. அருட்பா அரசு கிரிதாரி பிரசாத். 2. அருள் நெறித் தமிழகத் தலைவர் மகாலிங்கம், 3. மலேசிய சன்மார்க்கத் தலைவர் ஆறுமுகம் பிள்ளை. இம்மூவரும் சன்மார்க்கச் சரித்திரத்தின் சான்றோர்கள்.

அருள்! அழகு நிறைந்த அமைதி கலந்த அமுத வார்த்தையாம் அருள்! அருள் என்பது ஒளி ஜோதி என்பது பொருளாகும். ஒளியில்லையேல், எதுவுமில்லையே உலகிலே—உயிரிலும் கூட! அருள் ஒளிதான் உயிரை, உலகத்தை, பிரபஞ்சத்தை ஆக்கும் கடவுள் தன்மையது.

அருள் என்னும் அமுதம்

அருளின்றி அணுவும் அசையாது என்பது ஆன்றோர்களின் அறிவுரை; அழுத்தமான அமுத மொழி; தெள்ளத் தெளிவான தெளிவுரையுங்கூட. அருள் ஒளி இல்லையேல் உலகமே இருள்; இது முற்றிலும் உண்மையல்லவா?

அருள்ஜோதி இல்லையேல் இருள்; அருள் ஒளி ஆன்மஸ்வருபமானது. ஆத்மஞானத்தை, அமைதி ஆனந்தத்தை அளிக்க வல்லதே அருள் ஜோதி. இதைத்தான் கிருஸ்துவ வேதப் புத்தகத்தில் அதாவது பைபில் (Bible) புத்தகத்தில்—முதல் வாக்கியமே 'கடவுள் ஒளியுண்டாகட்டும்!' —என்று கூறியுள்ளது; இதுவே உண்மை;

இதையே நமது தமிழகத் துறவி தாயுமானவரும் தெரிவிக்கின்றார்; ''கற்பூர மலைபடு தீப்பட்ட விந்தை'' யென்று. அருள் ஒளியை அழகாக அறிவித்தார். இத்தகைய அமைப்பை, தமிழகம் தந்த தயாளமணி வள்ளலார் இராமலிங்கசுவாமிகள் அருளைப்பெருஞ்ஜோதியாக அதாவது அருட்பெருஞ்ஜோதி என்று அழுத்தமாக, அப்பட்டமாக, ஆணித்தரமாக அறிவித்துச் சென்றார்; வையகத்துக்கு வழி வகுத்துக் காட்டினார் வள்ளலார்.

அருட்பெருஞ்ஜோதி தான் கருணையில் மிகச் சிறந்தது; கருணை என்று சாதாரணமாகக் கூறாது, தனிப்பெருங் கருணை என்று தங்கத்தைப் போன்று தெளிவாகக் காட்டினார் சன்மார்க்கத் தந்தையார் இராமலிங்கம். அருட்பெருஞ் ஜோதிதான் தனிப்பெருங் கருணை; இதுவே மார்க்கம்; எல்லா மார்க்கத்திலும் சிறந்த மார்க்கம் என்பது பொதுவான வார்த்தை. ஆகவே சன்மார்க்கம் என்று எடுத்துக் காட்டினார். சன்மார்க்கம் என்று சொல்லி நிறுத்தினாரா? அதுவுமில்லை; சுத்த சமரச சத்திய சன்மார்க்கம் என்று ஆணித்தரமாய் எடுத்துரைத்தார் அவர்.

**அருள் பெற்ற உள்ளத்தில்
இருள் மண்டாது. தொல்லை,
வறுமை, பிணி எதுவும்
அருகில் அணுக மாட்டா,**

அருள்ஜோதி என்பது சுத்தமும் சமரசமும் சத்தியமும் நிறைந்த தனிப்பெருங் கருணையே சேவையாகக் கொண்ட தன்மையுளது அல்லவா? உதாரணம் சூரியன். சூரியன் சுத்தமானது; எல்லாவற்றிற்கும் சமரசம் செய்து வருகிறது; கருணையிலோ தனிப் பெருஞ் சேவையாக, அன்றாடக் கடமைதனைச் செய்து வருகிறது அல்லவா? அன்றாடக் கடமை மூலம் உலகம் யாவும் சுபிட்சத்தையும் சுகத்தையும் சாந்தியையும் விழிப்பையும் பெற்று வருகிறது; இது உண்மையே. ஆகவே கடமை பெரிது; கடமைக்குப்பஞ்சபூதம் என்னும்நெருப்பு, காற்று, மண், விண், நீர்—அதாவது நெருப்பு (சூரியன்)—காற்று —மண்ணால் விளையும் பொருள்கள் — விண் (ஆகாயம்) — நீர் (மழை) —இவ்வைந்தும் அன்றாடக் கடமைகளைச் செய்து வருவதை நாம் காண்கிறோம். ஆதலின் இப்பஞ்ச பூதத்தால் ஆக்கப்பட்ட நாம உலகம் யாவும் அன்றாடக் கடமைதனைச் செய்ய வேண்டும் அல்லவா? நிச்சயம் கடமைதனைச் செய்துதான் தீர வேண்டும்.

கடமையின் மூலம் ஒளியைக் காணமுடியும். கடமைக்கு அடிப்படை உண்மை, உயர்வு, ஒழுங்கு, நன்மை, தூய்மை என்னும் பஞ்ச தூண்களாகும்.

ஆகவே பஞ்சபூதங்களால் ஆக்கப்பட்ட நாம் இப்பஞ்ச தத்துவங்களிலே கடமையைச் செய்து வருகிறோம் என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எண்ணிப்

பார்த்தால், இந்நாளில் நாம் துன்பத்திலும், வறுமையிலும், பிணியிலும் வாழ வேண்டிய அவசியமே இல்லை.

உண்மை, பொறுமை என்னும் இரண்டு கண்களுடன் உழைப்பு, ஒழுங்கு என்னும் இரு கரங்களோடு உயர்வு, நன்மை என்னும் இருகால்களோடு தூய்மை (பரிசுத்தம்) யுடன் கடமையைச் செய்ய வேண்டும். இந்தக் கடமை மூலம் ஒளியைப் பெற முடியும். அருள் காண முடியும். இருள் அழிய முடியும். அருள் பெரிதா ? இருள் பெரிதா? சிறிது சிந்தித்துப் பாருங்கள்!

தூய்மை எங்கே உதயமோ அங்கே பக்தி உதயம். பக்தி எங்கே உதயமோ, அங்கேஅன்பு உதயம். அன்பு எங்கே உதயமோ, அங்கே சாந்தம் உதயம். சாந்தம் எங்கே உதயமோ, அங்குச் சக்தி உதயம். சக்தி எங்கே உதயமோ, அங்கு ஞானம் உதயம். ஞானம் எங்கே உதயமோ, அங்கே தியானம் உதயம். தியானம் எங்கே உதயமோ அங்கே கிருபை உதயம். கிருபை எங்கே உதயமோ, அங்கே தான் கடவுள் (அருள்) உதயமாகின்றார். கடவுள் (அருள்) பெற்ற மனிதனுக்கோ உலகுக்கோ நிச்சயமாகக் கடுகளவும் அணுவளவும் இருள் நிலையே இராது; சாந்தம், சுத்தம், சமரசம், வெற்றி போன்ற நிலையே ஏற்படும். அதாவது கடவுள் (அருள்) பெற்ற தன்மையான உள்ளத்துக்கு, உள்ளத்தைக் கடந்து, அருள் உதயம் பெற்ற உள்ளத்துக்கு தொல்லை, துன்பம், வறுமை, பிணி, முதுமை, கவலை, தோல்வி, வஞ்சகம், களங்கம் போன்ற இருள் எதுவுமில்லை. இது உண்மை! ஆதலின் அருள் எது? இருள் எது ? என்று நாமும் உலகமும் சிந்தித்து, இன்றைய இருள் வாழ்வை மாற்றி, திருத்தி அருள் வாழ்வில் வாழப் பிரார்த்தனை செய்வோமாக!

—Dr. BABAJI,
Sai Bhavan, Churag P.O.
Karsog Tehsil,(Via)Simla,
Himachal Pradesh


வியாபார விபூதி

இராதா சம்பத்

இப்பொழுது கடைகளிலே விற்பனை செய்யப்படும் விபூதி தூய்மையானதுதானா?

'மந்திரமாவது நீறு' என்று திருநீற்றின் பெருமையை ஏற்றிக் கூறுகிறார் திருஞான சம்பந்தர்.

அப்பேற்பட்ட திருநீறு இன்று வாசனைப் பொடி போல் சரளமாகவும், கடைச் சரக்காகவும் ஆகிப் போனது வேதனை தரும் விஷயம். சைவ சமய நெறி உணர்த்தும் திருநீற்றைத் தயாரிக்கும் முறையை நாம் படித்துணரும்கால் கடையில் கிடைக்கும் நீறு சமய நெறிப்படி செய்ததுதானா வென்ற ஐயம் எழத்தான் செய்யும்.



நீறு, சிவச் சின்னம். 'நீறில்லா நெற்றி பாழ்' என்கிறது ஒரு நீதி நூல். நெற்றிக்கு மட்டும் ஏற்றம் கொடுப்பதல்ல நீறு. நம் சைவ சமயத்துக்கே ஏற்றம் கொடுக்கும் பெருமை பெற்றது.

கழுமலத்துப் பாலகனும் ஐந்து வயது ஞான சம்பந்தன் தன் முதற்பாடலிலேயே 'காடுடைய பொடி பூசிய பெம்மான்' என்கிறார். சிவனே தரித்திருக்கிற பேறு நம் திருநீற்றுக்கு உண்டு. அவ்வளவு பெருமையுள்ள நீறு எளிதாய்த் தயாரிக்கக்கூடியதாய் இருககுமா?

'சைவ சமய நெறி' கூறுகிறது: 'பரம சிவனின் பக்தர்க்கு அடையாளமாய் விளங்குவன உருத்திராட்ச மணியும், விபூதி எனகிற திருநீறும் ஆம். இநத அற்புத நீறானது மூன்று வகைப்படும். அவை (1) கற்பம் (2) அநுகற்பம் (3) உபகற்பம் எனப்படும். இம்மூன்றுமல்லாதது அகற்பமெனப்படும். தரிக்க ஒவ்வாதது.

இனி விபூதி தயாரிக்க நாம் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகளின் நியதி பற்றிச் சைவ சமய நெறி கூறுகிறது: 'கன்று பிரசவித்த பசுவின் சாணம் பத்து நாட்களுக்குள்ளானால் உதவாது. கன்று ஈனுக் கன்னிப் பசுவின் சாணமும் தள்ளத் தக்கது. பிணிபட்டுத் துன்புறும் ஆவின் சாணமும் கன்று இழந்து நிற்கும் பசுவின் சாணமும் குற்றமுள்ளவை. இவற்றின் சாணத்தை விபூதி தயாரிக்க கொள்ளற்க என்கிறது நம் சமய நெறி. இதை,

'பிறந்திளைய கன்று பெருக் கன்னி பிணியா விறந்த கன்று மகா விழுக்கு' என்ற ஈற்றடி விளக்குகிறது.

'அதோடு, 'மூப்பு, மலடு, முடை மலம் தின்னும் பசு இவற்றினுடைய சாணமும் உதவாது. இவையல்லா மற்றவை அனைத்தும் ஏற்கத் தக்கது' என்கிறது ஒப்பறற நம சமய நெறி.

பங்குனித் திங்களில் பசானத்தாள் (பசானத்தாள் என்பது 'பசான'மென்னும் ஒரு வகை நெல்லினது தாளைக் கூறும்) மேய்ந்த பசுக்களின் கோமயமே கொள்க என்கிறது நெறி.

அதை எப்போது, எப்படிக் கொள்ள வேண்டும்?

''இரு நான்கு பஞ்சதசியேழிரண்டு தன்னில் வரமாகுங்கொள் கோமயம்''

அதாவது, அட்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி ஆகிய நாட்களே கோமயம் எடுக்க உத்தமமான நாட்கள். இந்நாட்களில் ஒன்றில் பசுக்களை வணங்கி சாவித்திரி போன்ற தோத்திரங்களைக்கூறிப் பின்னரே கோமயம் கொள்ள வேண்டும். இது நாம் எதிர்பார்த்துப் பெற வேண்டியவொன்றாயிருப்பதால் பசு சாணமிடும் வரை உக்தாதி மந்திரங்களை ஜபிக்கலாம்.

சாணத்தைத் தாமரை இலையிலே ஏந்தி, மேலுள்ள வழும்புகளை நீக்கி உள் சாணத்தைக் கொள்ள வேண்டும். (1) பசுவின் பிற்றட்டிலே ஏற்பது சாந்திகம். (2) பூமியில் விழுமுன் எடுப்பது பௌட்டிகம்; (3) பூமியில் விழுந்த பின் எடுப்பது காமதம். தாமரை இலையில் பௌட்டிக முறையில் எடுப்பதால் சாணத்தின் ஆடடினால் அதில் தாமரைச் சத்தும சேரக்கூடும் என்பது அடியேனது கருத்து.

அச் சாணத்துள் பஞ்சகவ்வியத்தை வாம மந்திரம் கூறி வார்த்து, அகோர மந்திரத்தைக் கூறி மெல்லப் பிசைய வேண்டும்.

அப்படிப் பிசையப்பட்ட சாணத்தை உருண்டைகளாக்கிப் பதரைப் பரப்பி அதன்மேல் தற்புருட மந்திரம் கூறி உருண்டைகளை வைத்து, சிவாக்கினி சமைத்துத் தகனம் செய்ய வேண்டும். நித்தியாக்கினி செய்யும் உத்தமர்கள் அதனாலேயே தகனம் செய்யலாம்.

சாணத்தை அன்றெடுத்து, அன்று உருட்டி, அன்றே தகனம் செய்தல் சிறந்ததென்றாலும், காய வைத்துச் சுடுவதும் தப்பிதமாகாது.

தகனம் முடிந்து விளைந்த நீற்றை ஆராய்ந்து கருகல் முதலியவற்றைத் தள்ளி, வெண்மை நிறம்உள்ளதையே எடுத்துத்தூய வத்திரத்தால் வடிகட்டி, நவ பாண்டத்தில் எடுத்து விபூதி காயத்திரி கூறி, மணம் தரும் மல்லிகை, செண்பகப் பூக்களைஅதன் உள் இட்டு, 'இதுவே நம் திரவியம்' என்று ஏற்றமான ஒரு மதிப்பை அதற்குக் கொடுத்து உபயோகிக்க வேண்டும்.

இவ்வளவையும் எண்ணுங்கால் சாத்தியமா வென்ற ஐயம் எழலாம். சாத்திய மற்றதைச் சாதிப்பதே சைவனின் கடமை. பலாப் பழத்தை அரிய அஞ்சினால் சுளையைப் பெறுவது எங்ஙனம்?

கடைகளில் உள்ள விபூதிப் பைகள் இப்படித் தயாரிக்கப்பட்டவைதானா? ○

வெளியிடுபவரும், ஆசிரியரும்: இராம. மணிமேகலை,
4, தணிகாசலம் செட்டி ரோடு, சென்னை-17
அச்சிடுபவர்: கொலடா. காசி. சீதாராமன,
ராமன்ஸ் பிரிண்டிங் பிரஸ், பாண்டிபஜார், தியாகராயநகர், சென்னை-17


ஆசிரியர்:
திருமதி தமிழ்வாணன்

அருள்

தென்னாட்டில் சிறந்த



தெய்விகப் பத்திரிகை



அரிராம்சேட்

நின் கண்களில் கருணை ஒளிர்கிறது !
நின் இதழ்களில் இசை மிளிர்கிறது !
நின் இதயம் அன்பை வார்க்கிறது !
நின் பெருமை எம்மை ஈர்க்கிறது !

த. பி. சொக்கலால்
ராம் சேட் பாக்டரி பிரைவேட் லிமிடெட்

திருச்சிற்றம்பலம்

பட முடியா தினித் துயரம்
படமுடியா தரசே
பட்டவெலாம் போதுமிந்தப்
பயந்தீர்த்திப் பொழுதென்
உடலுயிர்ஆ தியஎல்லாம்
நீஎடுத்துக் கொண்டுன்
உடலுயிர்ஆ தியஎல்லாம்
உவந்தெனக்கே அளிப்பாய்
வடலுறுசிற் றம்பலத்தே
வாழ்வாய்என் கண்ணுள்
மணியேஎன் குருமணியே
மாணிக்க மணியே
நடனசிகா மணியேஎன்
நவமணியே ஞான
நன்மணியே பொன்மணியே
நடராச மணியே

—திருவருட்பா

அருள்

தமிழ் மாத முதல்நாள் வெளிவருகிறது

இந்த இதழில்

அருள்—2	டிசம்பர்
கருணை—3	15—12—67
மார்கழி, பிலவங்க	விலை: 25 காசு

ஞானசித்தர்களும் சித்த மருந்தும்

திரு வி. பலராமையா அவர்கள் பி.ஏ., பி.எல்.
மாகாணத் தலைமை நீதிபதி, சென்னை

சித்தியடைந்தவர்கள் சித்தர்கள். சித்தியென்பது இங்கு முக்தியென்று பொருள். நினைத்தபோது விபூதி, குங்குமம், மாம்பழம் முதலியன கொடுப்பவர்கள்தாம் சித்தர்கள் என்று மக்கள் சிலர் நினைக்கின்றனர். உண்மைச் சித்தர்கள் மக்களுக்கு இந்த ஜால வித்தைகளைக் காட்டிப் பிரமை உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. கல்வியற்ற முரடர்கள் சிலர், சில மந்திரங்களை உருச் செய்து குட்டிச் சாத்தான்களை வசியம் செய்துகொண்டு, எத்தனையோ ஆச்சரியமான ஜால வித்தைகள் செய்வதை, நாம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோம். வீட்டின் கூரையில் கற்கள் விழுவதையும், இலையிலிட்ட சாதம் மலமாவதையும், வீட்டினுள் இருக்கும் துணிமணிகள் நெருப்புப் பிடித்து எரிவதையும், பலர் பார்த்தும் கேட்டும் இருக்கலாம். இவ் விதமான வித்தைகளைச் செய்பவர்களை முக்தி யடைந்தவர்களென்று சொல்லுவது பொருத்தமாகுமா?

சித்தர்களின் தத்துவப்படி மனிதன் இறந்து விட்டால் முக்தியென்பது கிடையாது. இறந்தவன் பிணமாகிவிடுகிறான். மனிதனின் இயற்கை வடிவம் இறந்து போகக் கூடியதன்று. மனிதன் தன் அறியாமையின் காரணத்தினால் இவ்வுடலை அழிந்துபோக விடுகிறான். முக்தி யென்பது பிறப்பைத் தவிர்ப்பது. பிறப்பைத் தவிர்க்க வேண்டில் இறப்புக் கூடாது. இறந்தவன் மறுபடியும் பிறந்தேயாதல் வேண்டும்.

ஆகவே, இந்த மறு பிறப்பைப் தவிர்த்தவர்களே சித்தர்கள். பிறந்தவன் இறந்துதானாக வேண்டுமென்று கூறும் பல சாத்திரங்களைச் சித்தர்கள் அறவே

புறக்கணித்திருக்கின்றனர். சித்தர்களிலே சிலர், இறந்தவன் இறந்தவன்தான்; மண்ணோடு மண்ணாய்ப் போய் விட்டவன் தான்; மறு பிறப்புக் கிடையாது' என்றே அபிப்பிராயப்படுகின்றனர். பஞ்ச பூதங்களால் ஆக்கப்பட்ட இந்த உடல் இறந்த பிறகு பிருதிவி பிருதிவியுடனும், அப்பு அப்புடனும், தேயு நெருப்புடனும், வாயு வாயுவுடனும் கலந்து விடுகின்றன என்று சொல்லுகின்றனர்.

'சிவ வாக்கியர்' இறந்தவன் பிறப்பதில்லை யென்று சொல்கிறார்:

''கறந்தபால் முலைப்புகா
கடைந்தவெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கிளோசை
யுயிர்களுமுடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்த காயும் மீண்டு
போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை
யில்லையில்லை யில்லையே''

இந்த அபிப்பிராயம் ஒரு புறமிருக்கட்டும். இந்த உடலை எப்படி இறவாமல் வைத்திருப்பதென்பது யாரும் கேட்க வேண்டிய கேள்விதானே?

உலகங்களெல்லாம் அணுக்களாலாக்கப் பெற்றவை. மனிதனின் உடலும் அணுக்களாலாக்கப் பெற்றது. இந்த அணுக்கள் சுபமாகவே வெகு சக்தி வாய்ந்தவை. பஞ்சபூதங்களாலான இவ்வுடலை இந்தச் சக்திகள் இறுக்கிப் பிடித்துக்கொண்டுள்ளன. ஆனால் மனிதன் தன் அறிவீனத்தினால் இந்தப் பஞ்ச பூதங்களின் நிலையைக் கலைத்து விடுகிறான். இவ்வுடலில் பஞ்ச பூதங்கள் அதனதன் எடைப்படி, அதாவது பிருதிவி $1\frac{1}{4}$ பங்கு, அப்பு $1\frac{1}{2}$ பங்கு, தேயு 1 பங்கு, வாயு $\frac{3}{4}$ பங்கு; ஆகாயம் $\frac{1}{2}$ பங்கு வீதம் பரிணமித்துள்ளன. இந்த எடைகளின்படி மனித உடல் இயங்கினால் மரணமே கிடையாது. ஆனால் மனிதனின் உடலில் மேற்படி பஞ்சபூதங்கள் அதனதன் அளவின்படி இயங்குவதில்லை. அதற்குக் காரணம் அவன் மனம்தான். வஞ்சனை, பொய், சூது, கபடம், பயம், கோபம், பொறாமை என்ற பல துர்க்குணங்கள் மனத்தைத் துன்புறுத்தி, ஆத்மானுபவத்தை நொடித்து விடுகின்றன. இதன் காரணமாகப் பஞ்சபூதங்களும் தத்தம் நிலைகளிலிருந்து மாறுபாடடைகின்றன. சீவ அணுக்களும் தளர்ந்து போகின்றன. பிணி, மூப்பு மரணத்தை வெகு விரைவில் உடல் அடைகின்றது.

இந்த அணுக்கள் தளராமலிருக்கும்படி சித்தர்கள் முக்கியமாகப் பல சாதனங்களைக் கையாண்டு வந்ததும் அல்லாமல், ஆரம்ப காலங்களில் சில மருந்துகளையும் கையாண்டு வந்ததாகத் தெரிகிறது.

பல வைப்புச் சரக்குகளைச் செய்து அவைகளை அணுக்களாக்கி, மறுபடியும் அந்த அணுக்களைக் கட்டினார்கள். அவைகளையே, கட்டு மருந்துகளென்று சித்த வைத்தியர்கள் சொல்வது. லிங்கக் கட்டு, தாளக் கட்டு, வீரக் கட்டு, இரசக்கட்டு என்பர், இந்தக் கட்டுகளை நெருப்புக்கு ஜெயிக்குமாறு செய்து விடுவர். இந்தக் கட்டு மருந்துகளை உபயோகிப்பதனால் உடலிலுள்ள அணுக்கள் கட்டுண்டு பல்லாயிர வருடங்கள் உயிர் வாழலாமென்பது சித்தர்கள் மரபு.

சித்தர்கள் உடலை வளர்ப்பது முக்கியம் என்று கருதினர். மெய்ஞ் ஞானம் அடைவதற்கு உயிர் முக்கியம். உயிர் வேண்டுமாயின் உடல் வேண்டும்.

ஆகவேதான் திருமூலர் ஆகிய அருட்பெருஞ் சித்தர்,

''உடம்பார் அழியின் டயிரார்
அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம்
அறிந்தே
உடம்பை வளர்த்தேன்
உயிர்வளர்த் தேனே''

''உடம்பினை முன்னம்
இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்கோயில்
கொணடான்என்று
உடம்பினை வான் இருந்து
ஓம்புகின்றேனே''

என்று தமது திருமந்திரம் என்னும் சிறந்த நூலில் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

இறந்தவன் முக்தி யடைவதென்பது முரண்பாடானதென்று மேலே சொன்னோம். சரி, ஆனல் அந்தச் சித்தர்கள் இறவாமல் இருக்கிறார்களா? அவர்கள் எங்குள்ளனர் என்பது கேள்வி?

சித்தர்கள் குகைகளிலும் காடுகளிலும் வசித்து வந்தார்கள். வசித்து வருகிறார்களென்பது துணிபு அவர்கள் சாதனை புரியுங் காலங்களில் காடுகளுக்கு ஓ'— வேண்டிய நிலையை மனிதர்கள் உண்டாக்கிவிட்டனர். எந்தமரத் தடியிலோ, இடிந்த மண்டபங்களிலோ உட்கார்ந்து கொண்டு தனித்துத் தன் வேலையைத் தான் பார்த்துக் கொண்டிருப்பவனை மனிதர்கள் சும்மா விடுகிறார்களா? பேசாமல் உட்கார்ந்தால் சிலர் அவனை ஊமையென்பார்கள் அல்லது செவிடன் என்று சிலர் சொல்வர். சிலர் இவன் யாரோ திருடன் என்பார்கள். மற்றும் சிலர் அவனைக் கல்லாலடிப்பர். மற்றும் சிலர் இவர் சாமியார் என்று சொல்லிக் கொண்டு கும்பல் கும்பலாகச் சென்று தங்கள் ஓயாத துக்கங்களைக் கொண்டு போய்க்கொட்டுவார்கள். ஆகவே ஒரு சாதகன் எப்படி இப்படிப்பட்ட மக்களினிடையில் வாசம் செய்யமுடியும். காட்டிலுள்ள மிருகங்கள், மனிதர்களைக் காட்டிலும் பன்மடங்கு உயர்ந்தன வென்று சாதகன் மறைந்து ஒளிந்து விடுகிறான். நாட்டிலுள்ள சில மகான்கள் பைத்தியக்காரர்களைப் போல் உடைதரித்து, பைத்தியக்காரர்களைப் போலவே பேசி மக்களை விரட்டுவார்கள். இதற்குத் காரணம் நான் மறுபடியும் விளக்கத் தேவையில்லை.

சித்தர்கள் தங்களுடைய உயர்ந்த நிலையில் உருவ வழிபாட்டைப் புறக்கணித்தவர்களென்றே சொல்ல வேண்டும். அவர்களும் தங்கள் சாதனைகளை மரத்தடிகளில் உட்கார்ந்தோ, படுத்தோ செய்து வந்தனரென்று தெரிகிறது. அவர்கள் தங்கள் சாதனைகளினால் பல சித்திகள் பெற்றனர். சித்திகளுக்காகப் பாடுபட்டவர்கள் அல்லர். தானாகவே பல சித்திகள் அவர்களை வந்து அண்டின. அவைகளையே அஷ்டமா சித்திகளென்பர். அவற்றினுடைய விவரம்:

(1) அணிமா: சூட்சுமம் காரணம் மகா காரண சரீர மென்பதில் மகா காரண சரீரமாய் அணுவில் அணுவாக நுழைவது. அதாவது இந்த ஸ்தூல உடலை ஓர் அணு ரூபமாய்ச் செய்து கொண்டு ஆகாயத்தில் பறப்பது.

(2) மகிமா: விசுவ ரூபமாய்த் தோன்றல் அதாவது இந்த ஸ்தூல உடலை மலையளவுவேண்டுமானாலும் பெருக்கிக் கொள்வது.

இராவணன் முன்னர் அனுமான் தன் வாலை நீட்டிக்கொண்டதனை நாம் இங்கு நினைவு கொள்ளலாம்.

(3) கரிமா: எவ்வளவு பளுவாக வேண்டுமானாலும் செய்து கொள்ளுதல், எத்தனை Bull-dozer களானாலும், Crane களானாலும் அவ்வித உடலை அசைக்க முடியாது.

(4) லகிமா: இறக்கையைப் போல் தக்கையாய் உடலைச் சுமையின்றிச் செய்து கொள்ளல்.

(5) பிராப்தி: எவ்வுலகத்தும் எவ்விடத்தும் தடையற்றுச் சஞ்சரித்து வருதல்.

(6) பிராகாமியம்: பிறர் காயத்தில் நுழைந்து நினைத்தவரிடம் அக்கணமே தோன்றல் (கூடுவிட்டுக் கூடு பாய்தல்)

(7) ஈசத்துவம்: பஞ்ச கிர்த்தியத் தொழிலை நடத்தல் (எல்லா உயிர்களுக்கும், ஜட வஸ்துக்களுக்கும் உயிர்ந்த உயிராயிருத்தல்)

(8) வசித்துவம்: தேவர் முதலானோர்அனைவரையும் தன் வசப்படும்படி செய்து கொள்ளுதல்.

''அறவுஞ் சிறிய வுயிர்
தொறுந்தான்
பரம காட்டை யணுவாய்ச்
சென்
றுறையுஞ் சிறுமை அணிமாவாம்;
உவரி ஞால முதன்மேலென்
றறையுஞ் சிவாந்தம் ஆருறும்
உள்ளும் புறனும் அகலாதே
நிறையும் பெருமை தனையன்றோ
மகிமா வென்னும் நிரம்பிய
நூல். (1)

இலகு மேரு பாரம்போல்
இருக்கும் யோகி தனை
யெடுத்தால்
இலகு வான தூலமென
இருப்பது இலகி மாவாகும்;
இலகு வான பரவணுப்போல்
இருக்கும் யோசி தனை
யெடுத்தால்
இலகு மேரு பாரமென
இருப்ப தன்றோ
கரிமாவாம். (2)

பிலத்தில் இருந்தோன்
அயனுலகிற்
புகுதல் மீண்டு பிலமடைதல்
பலத்தின் மிகுந்த பிராத்தி
அதாம்; பரகா யத்தின்
நண்ணுதல்வான்
புலத்தின் இயங்கல் இச்சித்த
போகம் அனைத்தும்
தானிருக்குந்
தலத்தின் நினைந்த படிவருதல்
பிராகா மியம்ஆந் தவக்கொடி
யீர். (3)

விண்ணில் இரவி தன்னுடம்பின்
வெயிலால் அனைத்தும்
விளங்குதல்போல்
மண்ணில் உளவாம் பொருள்
பலவுங்
காலமூன்றும் வானத்தின்
கண்ணில் உளவாம் பொரு
ளுந்தன்
காயத் தொளியால் இருந்
தறிதல்
எண்ணில் இதுவும் மறையொரு
சார்
பிராகா மீயம்என் றியம்பு
மால். (4)

ஈசன் எனமுத் தொழிலுந்தன்
இச்சை வழிசெய் தெழுபுரவித்
தேசன் முதற்கோள் பணி
கேட்பத்
திகழ்வது ஈசத் துவம்ஆகும்
பூசல் அவுணர் புள்விலங்கு
பூத மனிதர் முதலுலகும்
வாச வாதி யெண்மருந் தன்
வசமாக் கொள்கை வசித்துவம்
ஆம். (5)

—திருவிளையாடற் புராணம்.

இந்த சித்திகளைப் பெறுவது சீவன் முக்தனுடைய குறியன்று. இவைகளினால் மாத்திரம் ஒருவன் ஞான சித்தியை யடைய முடியாது. ஞானசித்தியடைவதற்கு முன் மேற்படி சித்திகள் அடையப்பெறுதல் வேண்டும். ஞான சித்தியடைவதே சித்தர்கள் முடிவு. தான் அவனாகவும், அவன் தானாகவும் பிரமாணிப்பதே ஞான சித்தி. அதுவே அஹம்பிரம்மோஸ்மி! ஓம்சிவோஹம்! ஆகவே வாயளவில் அகம் பிரம்மோஸ்மி! ஓம் சிவோஹம்! என்று பிதற்றுவதனால் ஏதாவது பயன் பெற முடியுமாவென்பதை நாம் ஆலோசித்தல் வேண்டும்.

(தொடரும்)

○

போதும் என்ற திருப்தி உனக்கு என்று உண்டாகின்றதோ அன்று இன்ப மாளிகையின் முற்றத்தை நீ அடைந்தவனாவாய்.

—கிருபானந்தவாரியார்

மாணவரும்

'உடையார் முன் இல்லார் போல ஏக்கற்றும்'

கற்கவேண்டிய மாணவர் அரசியலில் கலந்து கொள்ளலாமா என்ற வினா இன்று அறிஞர் உலகில் முழங்குகிறது. இதற்குப் பலவாறாகப் பதில்கள் தரப்பட்டுள்ளன. அரசியல் என்பது முதிர்ந்த கலைஞருக்கும் ஆழ்ந்த அறிஞருக்குமே உரியது என்பது வள்ளுவப் பெருந்தகையின் கருத்தாகும். அரசியலில் புக விழையும் மாணவர்கள் இதைச் சிந்தித்துப்பார்ப்பதில்லை இன்றும். சிலர் தம் கருத்துக்கினியவரும், சிந்தனைக்குச் சுவை தரும் சொல்லாற்றல் படைத்த அரசியல் கட்சியினரும் காட்டும் வழியில் செல்கின்றனர்.

'அரசியல் என்பது கொடியரின் இறுதிப் புகலிடம்' என்பது அறிஞர்கள் கருத்து. மக்களாட்சி மலர்ந்துள்ள எல்லா நாட்டிலும், ஆளும் கட்சிக்கு எதிர்க்கட்சி இருக்கும். அவர்கள் மக்களின் ஆதரவைப் பெற வேண்டிச் சிலவேளைகளில் பொய்யான கற்பனைகளை, மக்கள் மனதில் புகுத்துவார்கள். உணர்ச்சி வாய்ந்த மாணவர்களை, தம்கட்சி வன்மை பெறுவதற்காக வஞ்சக வழிகளில் ஈர்ப்பார்கள். இதனால் தான் மாணவர்கள் அரசியலில் புகலாமா என்ற வினா எழுகிறது. அதனின்று மாணவர் பெரிதும் விலகியிருப்பதும் நன்றன்று. அரசியல் மனித வாழ்க்கையிலின்றும் பிரிக்க முடியாத ஒன்று. ஆகவே, மக்களை மக்களால் ஆளப்படும் ஆட்சியில், நாட்டின் எதிர்காலப் பிரஜைகள் ஆன மாணவர்கள், அரசியல் நிலையை நன்குணர்ந்து. ஆர்வம் கொண்டு, ஆற்றல் புரிதல் தவறன்று என்று வினா எழுப்புகிறார்கள். அதே சமயத்தில், நம் நாடு, நம் நிலை, நம் கல்வி நிலை, நம் எதிர்காலம், நம் பண்பு, நம் ஆற்றல், ஆகியவற்றையும் சற்றே சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம் நாட்டின் கல்வித்தரம் மிகவும் உயர்ந்து காணப்படவில்லை. மற்றைய நாடுகளுடன் நாம் இணைபற்று நிமிர்ந்து நிற்க, நம்மவர், பொறியியல், அறிவியல் வேதியல், மருத்துவம், அறுவையியல் முதலிய துறைகளில் சிறந்த பயிற்சி பெற்று நாட்டின் இன்னல்களைக் களைதல் வேண்டும். அதை விடுத்து, அரசியலில் குதித்து, இளமையைப் பாழ்படுத்தி, வருங்கால இந்தியாவின் 'சிந்தனைச் சிற்பி' என்ற பெயரை இழக்கலாமோ? அரசியல் கட்சிகளின் வஞ்ச வலை வீசப்படாத இடமே இல்லை. கல்லூரி, தேர்வு மன்றம், உணவு விடுதி போன்றவைகளில் மாணவர்களின் வேலை நிறுத்தங்கள், பொருட்களைச் சேதஞ் செய்தல் போன்ற வன்முறைச் செயல்களுக்கு அரசியல் கட்சிகளே காரணமாக இருக்கின்றன. இவை தவிர்க்க வேண்டிய ஒன்றாகும்.

அரசியலும்

எம். ஏ. பழனிசாமி

இன்றைய மாணவர் கையில் தான் வருங்கால இந்தியாவின் வாழ்வு அமைந்து கிடக்கின்றது. மாணவர் இன்று பண்பட்ட ஒழுக்கப் பயிற்சி பெற்றால் வருங்கால இந்தியா மண்ணுலகில் நிறுவப்பெற்ற விண்ணுலகமாக விளங்கும். அவர்கள் பள்ளியிலும், கல்லூரியிலும் பெறும் பயிற்சிகள், பசுமரத்தாணி போல், மனதில் பதிந்து வாழ்க்கை முழுதும் நிலைத்து, சிலையில் வடித்த சிற்பம்போல் மாறாமல், வடுவற்றதாய், வருங்கால வாழ்க்கைக்கு ஏற்றதாக இருக்கும். இந்த மாதிரியான சூழ்நிலையில் தான அவர்கள் உருவாக வேண்டும். எனவே மாணவர், கட்சிப் பூசல்களில் கலந்து கொள்ளாமல், நடுநிலையில் நின்று பாடங்களைப் படித்துப் பட்டங்கள் பெறுவது, அவர்கள் நாட்டிற்கும் தமக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளில் ஒன்றாகும். அரசியல் அறிவு தேவை எனினும், கட்சிகளில் சேர்ந்து பணியாற்றுதலோ, கட்சிகளின் கூச்சல்களைக் கேட்டுப் பொங்கி எழுதலோ கூடாது.

‘மாணவர் சுதந்திரப்போராட்டத்தில் அரசியலில் கலந்து கொள்ளவில்லையா? காந்திஜி போன்ற தலைவர்கள் அதனை ஆதரிக்கவில்லையா? பல அறப் போர்களில் அவர்கள் பங்கெடுத்துக் கொண்டனரே! இன்று மட்டும் அரசியலில் புகுவது நேர்மையல்லாமல் போகுமோ?’ என்று சிலர் வினவலாம். தக்க அடிப்படையில் நோக்கினால் இதைவிடத் தவறான வினாக்கள் கேட்க முடியாது. அன்று நம் நாட்டு உரிமைக்காகப் போரிட்டோம். நம் நாட்டு விடுதலைக்கு அன்று ‘அறிஞர், முதியோர், இளைஞர், பெண்டிர்’ முதலிய அனைவரின் பணியும் தேவைப்பட்டது. கல்வியைவிட, ஏன் உயிரையேவிடச் சுதந்திரமே பெருமை வாய்ந்தது. தேவையானது அது அன்றைய நிலை இன்று நம்மை நாமே ஆளுகிறோம். இதில் அவரவர் கடமையை அவரவர் செய்ய வேண்டும். ஆதலால், மாணவர் வீணாக, கருத்தின்றி, வஞ்சிக்கப் பட்டவர்களாய், அரசியலில் புகுந்து, தம் வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்ள வேண்டாம்.

மாணவர் உலகில் அரசியலைப் பற்றித் தவறான கருத்து நிலவுகிறது. அரசாங்கத்தை எதிர்த்தே பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று சிலர் கருதுகின்றனர். ஆளும் கட்சி நாட்டு நலனை நாடி நன்முறையில் ஆளவில்லை என்றால் அதனைச் சுட்டிக் காட்டித் திருத்த, தனிப்பட்டவர்கள் இருக்கிறார்கள். அதற்குப் போராட்டமோ, அறமற்றவழியோ, செயல்பட வேண்டிய அவசியமில்லை. மேலும் மாணவர்க்கு, ‘வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினை’ என்ற ஐந்தும் ஈட்டவேண்டிய இளமைப் பருவத்தில் அரசியலே தேவை இல்லை!

முடிவாக, மாணவர் கற்கும் காலத்தில், நாட்டின் நிலைமையைப் பற்றியும், அரசியல் நிலை பற்றியும் பல நூல்கள் வாயிலாக, தெரிந்து கொள்ளல் வேண்டும். பல அரசியல் கட்சிகளின் வரலாற்றையும், தோற்றத்தையும், எந்தக் கட்சியால் நாடு நலம் பெறும் என்ற இயல்பையும் அவர்கள், சிந்தித்துத் தெளிதல் வேண்டும். ஆகவே மாணவர்கள் அரசியலின்றும் விலகி நின்று, நாட்டு நலனுக்கேற்ற வகையில் கல்வியும், உடல் வலுவும், அஞ்சாமை, ஈகை போன்ற பண்புடனும் திகழ்தல் வேண்டும்.

—சுடர்

'பக்தி' என்பது, எல்லாம் வல்ல இறைவனிடத்தே நம்மால் காண்பிக்கப்படும் தூய்மை அன்புக்குப் பெயராகும். பக்தர்கள் கடவுள் ஒருவரையே காண விரும்புகின்றனர். அவர்கள் சுயநல மனப்பான்மையே அற்றவர்கள். இடைவிடாது என்றும இறைவனிடம் செலுத்தும் பரிசுத்தமான அன்பிற்கே 'பக்தி' என்று பெயர். அவ்வன்பு மிக மிகத் தூய்மையானது. அது உண்மை பக்தர்களால் மட்டும் அனுபவிக்கக் கூடியது.



பக்தி யோகம்

ரா. குப்புசாமி, பி. ஏ., பெங்களூர்

எல்லா மதங்களுப், சமயங்களும் அஸ்திவாரமாகக் கொண்டது நல்பக்தி ஒன்றையே. பக்தி, மனதை மிக உயர்ந்த, உன்னத, உச்சிக்கு உயர்த்துகிறது. அஞ்ஞானமாகிய பூட்டைத் திறந்து, ஞானவொளி நிரம்பிய அறையினுள் அடைய, ஆத்மனில் மனதைக் கலக்க, பக்தியானது திறமை மிக்க, பயம் அற்ற, ஒப்புயர்வற்ற சாவிஆகும். பக்தியின் இறுதி எல்லைஞானம்ஆகும். பக்தியின் 'ஆரம்பம்' தொழுகின்றவன் ஆகும். அவனே 'ஒன்று' ஆகும். துதிக்கப்படுபவன் ஆகியஇறைவன் 'இரண்டு' ஆகும். இவ்விரண்டிலிருந்தும் விடுபட்டு, இவ்விரண்டின் அம்சங்கள் ஒன்றும்இல்லாமல் இறைவனுகவே மாறுவதுஇறுதி ஆகும். பராபக்தியும், ஞானமும் ஒன்ருகும். பக்தி இல்லாது வாழ்பவனின் வாழ்க்கை வரண்ட பாலைநில வாழ்விற்கு ஒப்பாகும். வாழ்வு இருந்தும் அவன் வாழ்வு அற்றவன் ஆகிருன். சர்வ வல்லமை வாய்ந்த பரமனிடம் பரிபூரணமாகச் சரண் அடைதல் வேண்டும். மனதை அவர் பால் நிறுத்தி, எல்லா முகங்களிலும் அவரையே கண்டு, அவருடைய புகழையே பாடுதல் வேண்டும். அவருக்காக உழைத்து, அவரைத் தவிர வேருென்றையும் நினைக்கக் கூடாது. அவர் நம்மை ஊக்கப்படுத்தி, எல்லா விதமான கஷ்டங்களிலிருந்தும் நம்மைக் காப்பாற்றி, ஒளி, அன்பு, ஞானம் என்னும் 3 பெறுதற்கரிய பேறுகளைக் கொடுப்பார்.

பக்தி என்பது 9 பிரிவுகளை உடையது:

1. ஸ்ரவணம் : இறைவன் லீலைகளைக் காதால் கேட்பது.

2. கீர்த்தனம்: அவன் புகழை வாயால் பாடுவது.

3. ஸ்மரணம்: அவன் நாமத்தையே நினைப்பது

4. பாதசேவனம்: அவன் பொற்றாமரைத் திருவடிகளை வழிபடுவது.

5. அர்ச்சனம்: அவனைப் பூக்களால் பூஜிப்பது.

6. வந்தனம்: அவன் முன் உள்ளம், உடல் ஒன்றுபட வணங்குவது.

7. தாஸ்யம்: அவனுக்குரிய பணிகள் புரிவது.

8. ஸக்கியம்: அவனிடம் நட்புக் கொள்வது.

9. ஆத்ம நிவேதனம்: அவனிடம் தன்னைப் பரிபூரணமாக ஒப்படைப்பது.

பக்தியை வளர்க்க, ஆன்மீக நாட்டம் உள்ளவர்களின் நட்புத் தேவை. அடியார்களுக்குப் பணி செய்தல் வேண்டும். அவர்களுடன் சேர்ந்து இருக்கவேண்டும். ஜபமும், கீர்த்தனையும் செய்ய வேண்டும். இராமாயணம் பாகவதம்போன்ற ஆண்டவனைப்பற்றிக்கூறும் நூல்களைப் படிக்க வேண்டும். பிருந்தாவனம், அயோத்தி, காசி, இராமேஸ்வரம், சிதம்பரம், திருத்தணி, திருவண்ணமலை, வடலூர் போன்ற திவ்விய க்ஷேத்திரங்களில் தங்கி, பக்தியைப் பெருக்க வேண்டும்.

ஞானபூமியாகிய நமது பரத கண்டத்தில் பகவானது பக்தர்களின் மகத்துவம் மகிமைபெற்று விளங்குகின்றது. இன்றைக்கும் பக்தர்களின் மகிமையைக் கூறும் மார்க்கத்தில்தான் அமைந்தன நமது சாஸ்திரங்கள். நமது புண்ணியபூமியை 'சித்தி நிலை, புத்தி நிலை விளைகின்ற பூமியே!' என்று தாயுமானவர் கூறுகிறார். பகவானை இதயக் கோயிலில் அமரச் செய்த பக்தர்களின் பெருமை தான் சொல்லொணாது ஆகும். பக்தர்களின் சித்தம் எதுவோ அதுவேதான் பகவத் செயலாக அமைந்து விடுகிறது. ஆகையால்தான் ஔவையாரும் 'தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே' எனக் கூறியுள்ளார்.

இரக்கம், கொடை, தன்னலம் அற்ற பணி இவைகளைப் பயிலுவதால், அவை உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி, கடின மனதுடையவனை இரக்கம் உள்ளவனாக மாற்றி, சாதகனை இறைவன் அருள் ஒளி கிரகிக்கும் பாத்திரம் ஆகத் தயார் செய்கிறது. சாத்திரம், சமுத்திரம் போன்று கரை காண முடியாதது. அறியக் கூடியது. எல்லை அற்று அதிகரித்துக் கொண்டே போகும். வாழும் நாளோ மிகவும் அற்பம். இடையூறுகளோ இலக்கத்தில் அடங்கா. புரிந்துகொள்ள வேண்டியதை மட்டும் கிரகித்துக் கொண்டால் அந்தக் கிரகிப்பு 'பக்தி' தான் என்பதை அறிய நமக்கு மிகவும் எளிதாகிறது. ஆகையால், நம் மனதில் பக்தி என்னும் காட்டுத் தீ பரவ வேண்டும். நம் உள்ளம் பக்தி நிரம்பியதாக வேண்டும். நம் வாழ்க்கை தொடர்ந்ததோர் யோக முறையாக அமையவேண்டும். செயலின் தகுதியே யோகம். பந்தனம் இன்றிச் சேவை செய்தலே யோகம். தன்னலம் அற்ற உழைப்பே யோகம். சீர் தூக்கிய மனமே யோகம். ஒழுக்க நிறைவே யோகம். தூய பக்தியே யோகம். தெவிந்த நிலையே யோகம். பேருணர்வு நிலையே யோகம். சிறந்த, உயர்ந்த பக்தர்களின் ஆசி

எல்லாரையும் காப்பாற்றட்டும்! எல்லை அற்ற ஆனந்தத்தை எல்லாரும் பெறட்டும்!

உலக வாழ்வில் மனிதன் படுகின்ற துன்பங்களிலிருந்து அவனை விடுபடச் செய்வதே, பக்தி யோகத்தின் பயன். ஓடி ஒளியும் இன்பங்களைத் தேடிப்பிடிப்பதும் நம்மைத் தேடிப் பிடிக்கும் துன்பங்களைக் கண்டு ஓடி ஒளிவதுமே இன்றைய நம் வாழ்க்கையாக இருக்கிறது. இந்த அவல நிலையிலிருந்து விடுபட்டு, மனிதன் என்றுமே துன்பம் அற்ற ஓர் இன்ப வாழ்வை வாழ்ந்து நிற்கும் வழியைத்தான் 'பக்தியோக வழி' என்று கூறுகிறது பகவத் கீதை. இறைவனே அன்பு வடிவினன். அறிவு வடிவானவன். ஆகையால், அவனுடைய சொற்களில் எல்லாம் நன்மையே இருக்கும் அல்லாமல், நன்மையற்றது இராது கொடுமை இராது. அவன் செயல்கள் எல்லாம் நன்மை வடிவிலேயே அமைந்திருக்கும். அந்த நன்மை என்பது என்னவென்று அவனுக்குத்தான் தெரியும். நமக்குத் தெரியாது. ஆகையால் அவனுடைய கருணையில் முழுமையான நம்பிக்கை வைத்து, எது நடந்தாலும், எல்லாம் நன்மைக்கே என்று எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பதே பக்தி யோகிகளின் பண்பாடு ஆகும்.

'பக்தியோகம்' பயிலுபவர்கள், உலகில் எவரையுமே குறை கூறமாட்டார்கள். 'எல்லாம் அவன் செயல்' என்ற அடிப்படை உணர்விலிருந்து அவர்கள் ஒரு நாளும் நழுவமாட்டார்கள். பிறருக்குத் துன்பம் வரும்போது மட்டும் அல்லாமல், தனக்கே தாங்க முடியாத துன்பங்கள் வரும்போதுகூடத் துன்பங்களே நமது நன்மைக்காக வருபவை தாம் என்ற துணிவு ஒருவனுக்கு ஏற்பட்டுவிடுமானால், அவன் இன்பங்களை நாடி ஓடித் திரியாமல், இன்பம் துன்பம் இரண்டுமே அவனுக்கு ஒன்றாகத் தெரியும் என்னும் மெய்ப்பொருளை எவன் உணர்கிறானோ, அவனே 'யோக சித்தி' பெற்றவன் என்கிறது பகவத் கீதை. அப்பேர்ப்பட்ட உத்தமனின் உள்ளத்திலே தெள்ளத் தெளிந்த நீருக்கு அடியிலே கிடந்து பிரகாசிக்கும், ஜகஜ் ஜோதியாய் விளங்கும் விலையில்லா முத்தைப்போல், இறைவன் தன் உண்மை அறிவான ஆனந்த வடிவில் இடைவிடாமல் என்றென்றைக்கும் எப்பொழுதும காட்சியைக் கொடுத்துக் கொண்டே இருப்பான்! இத்தகைய அருமையான கண்கொள்ளாக் காட்சியைக் கண்டவன் தான் யோக பக்தன். அதைப் பெற்றவன், தான் ஒரு மனிதன் என்ற உணர்விலிருந்து முற்றும் விடுபட்டு, தானும் அந்த இறைவனாகவே ஆகிவிடுகிறான் என்பது உபநிடதங்களின் உறுதியான முடிவு! ○

பேச்சினிமை

இன்று தூத்துக்குடியில் வ. உ. சி. கல்லூரியின் முதல்வராக இருக்கும் செந்தமிழ்ச் செல்வர் திரு. அ. சீநிவாசராகவன் தமிழகத்தின் அரும் செல்வம். பெரும் பொருள். பேச்சு, எழுத்து, நட்பு ஆகிய மூன்றுக்கும் திரு. அ. சீ. ரா எடுத்துக்காட்டாக இருப்பவர். இவரிடமுள்ள தனிச் சிறப்பு: இவர் சிரிக்கும் போது மற்றவர்களால் சிரிக்காமல் இருக்க முடியாது!

அப்பொழுது திரு அ. சீநிவாசராகவன் அவர்கள் விவேகானந்தர் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராக இருந்தார். கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தார் தம்முடைய ஆண்டு விழாவுக்கு வந்து சொற்பொழிவாற்ற வேண்டுமென்று அவருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தனர். எனக்கும் எழுதி எப்படியாவது அவரை இணங்கச்செய்யவேண்டுமென்று கேட்டிருந்தனர். நான் திரு அ. சீ. ரா வீடு சென்றேன். கல்கத்தாவில் உள்ள தமிழர்கள் நல்ல ரசிகர்கள் என்றும் மிகவும் அன்புடன் உபசாரம் செய்பவர்கள் என்றும் சொல்லி, ''நீங்கள் அங்கே போனால் அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைவார்கள். அவர்களுக்கு உங்களுடைய சொற்பொழிவுகளைக் கேட்க வேண்டுமென்று மிகவும் ஆசை, அவர்கள் செய்யும் உபசாரத்தை ராஜோபசாரம் என்றே சொல்ல வேண்டும்'' என்று விரிவாகக் காரணங்களையும் கூறிப் போகும்படி வேண்டிக் கொண்டேன். வேலை இருந்தாலும் போவதாக ஒப்புக் கொண்டார். அவர் அங்கே போய்ப் பேசினால் எல்லோருடைய உள்ளத்தையும் கவர்ந்து வருவார் என்பதை நான் உறுதியாக அறிவேன்.

அவர் கல்கத்தா சென்றார்; பேசினார்; திரும்பி வந்தார். வந்தவுடன் என்னுடன் டெலிபோனில் பேசினார். ''போன இடத்தில் அவர்கள் சரியாக நடந்து கொண்டார்களா!'' என்று கேட்டேன். ''நீங்கள் சொன்னது போல் இல்லை'' என்றார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது! ''நான் மிகையாகச் சொல்லிவிட்டேனோ?'' என்று கேட்டேன்.

''குன்றக் கூறலும் ஒரு குற்றந் தானே? நீங்கள் சொன்னதைப் போல் ஆயிரம்மடங்கு அவர்கள் அன்பைக் காட்டி என்னைத் திண்டுமிண்டாடச் செய்துவிட்டார்கள்!''

இதைக் கேட்டு நான் ஆறுதல் பெருமூச்சு விட்டேன். அங்கே அன்பர்கள் பல சபைகளில் பேசச் சொன்னதையும், வங்காளிகள் கூடிய சபையில் ஆங்கிலத்தில் பேசச் சொன்னதையும் விருந்து

கி. வா. ஜகந்நாதன்

உபசாரங்களை அளவுக்கு மிஞ்சிச் செய்ததையும் சொன்னார். ''அவர்களுக்கு ஓரளவு திருப்தி தான்'' என்று மட்டும் தம் பேச்சைக் குறித்துச் சொன்னார்.

ஆனால் கல்கத்தா நண்பர்கள் எனக்குப் பின்பு எழுதினார்கள். எனக்கு கவுரவம் உண்டாயிற்று; அன்பர் திரு சீனிவாசராகவனை அனுப்பிக் கொடுத்ததற்காகத் தான். ''என்ன அழகாகப் பேசுகிறார்! நாங்கள் தேன் குடித்த நரி போல மயங்கிப் போனோம். அதைவிடப் பெரிய ஆச்சரியம், அவருடைய ஆங்கிலப் பேச்சில் வங்காளிகளெல்லாம் மயங்கிவிட்டார்கள். அங்கே பேசவேண்டும், இங்கே பேசவேண்டும் என்று எங்களைத் துளைத்தெடுத்து விட்டார்கள். ஆழ்வார்கள்வாக்கைப் பற்றியும் ரவீந்திரரின் கவிதையைப் பற்றியும் திரு ராகவனவர்கள் பேசப் பேச அவர்கள் தம்மையே மறந்து பேச்சில் ஆழ்ந்து விட்டார்கள்'' என்று எழுதியிருந்தார்கள்.

அடுத்த ஆண்டு திரு ராகவனும், நானும், ராகவனுடைய மாணவரும் நல்ல சொற்பொழிவாளருமாகிய அமரர் முத்துசிவனும் கல்கத்தா போனோம். அப்போது இன்னும் தெளிவாக உண்மை புலனாயிற்று. திரு அ.சீ. ராவுக்குக் கங்கைக் கரையில் எத்தனை பக்தர்கள் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டேன். ஒவ்வொரு வருஷமும் ஏதாவது ஒரு சங்கத்தின் பெயரால் அவரை அழைக்க அவர்களுக்கு விருப்பம். ''நாங்களும் வங்காளிகளும் ஒன்றாக நெருங்கிப் பழக விரும்புகிறோம். வங்காளிகளுக்குத் தங்கள் கலை, கவிதை ஆகியவை போல இந்தியாவில் வேறு எங்கும் இல்லை என்று எண்ணம். தமிழின் பெருமையை அவர்கள் உணரவேண்டுமென்பது எங்கள் ஆவல். எங்கள் ஆவலை இவர்கள் நிறைவேற்றி வைக்கிறார்கள். கம்பனைப் பற்றியும் ஆழ்வார்களைப் பற்றியும் இவர்கள் பேசும்போது அவர்கள் 'தமிழில் இவ்வளவு அழகான கவிதைகள் இருக்கின்றனவா?' என்று ஆச்சரியப்பட்டுப்போனார்கள். அதைவிட மற்றொரு பெரிய காரியம். ரவீந்திரரைப் பற்றி இவர் பேசுவதைக் கேட்டு அவர்கள் துள்ளிக் குதிக்கிறார்கள். இவரால் எங்களிடம் அவர்களுக்கு உள்ள மதிப்பு ஒரு முழம் உயர்ந்து விட்டது'' என்று அன்பர்கள் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார்கள். எனக்கும் பெருமையாகத்தான் இருந்தது.

அ. சீ. ராவின் பேச்சிலே முழு வடிவம் ஒன்று இருக்கும். ஒரு நிகழ்ச்சி, அல்லது அநுபவ சம்பவம் ஒன்றிலே தொடங்கி எடுத்துக் கொண்டு விஷயத்தோடு பொருத்துவார். ஓவியத்துக்கு வடிவம் முக்கியம்; அதோடு வண்ணமும் முக்கியம்; அந்த வண்ணமும் மொத்தையாக இல்லாமல் ஒளியும் நிழலும் இணைந்ததாக அமையவேண்டும். திரு ராகவனவர்களுடைய பேச்சிலே மான கட்டுக்கோப்பு இருக்கும்; இனிமையும் கச்சித அழகும் துளும்பும்; அங்கங்கே பலவகையான பாவங்கள் கலந்துவரும். ஆரோகண அவரோகண கதியிலே ராகம் பாடிக் கீர்த்தனம் பாடி முத்தாய்ப்பு வைக்கிறது போல இருக்கும் அவர் சொற்பொழிவு. அதைக் கேட்கும்போது இனிமையாக இருக்கும்; கேட்டுக்கொண்டே இருக்க வேண்டும் என்ற ஆவல் தோன்றும்; கேட்ட பிறகு அடிக்கடி எண்ணி இன்புறும் பயனும் இருக்கும்; பல புதிய கருத்துக்களைத் தெரிந்து கொண்டிருப்போம்'

அந்தப் பேச்சை அப்படியே எழுத்தில் வடித்தால் அழகிய கட்டுரையாகி விடும்.

அவருடைய சம்பராமாயணப் பேச்சுக்களைக் கம்பன் விழாவிலும் வேறு இடங்களிலும் கேட்டவர்கள் கம்பனுடைய கவியிலே அவர் நுழைந்து எடுத்துக் காட்டும் இன்பப் புதையல்களை அநுபவிப்பார்கள். ஒரு காவியத்தை அநுபவிப்பதில் இருவகை உண்டு; முழுமையாகக் கண்டு அநுபவிப்பது; நுட்பங்களைக் கண்டு இன்புறுவது. சிலர் பொதுவாகக் குண சித்திரங்களையும், கதையின் அமைப்பு முறையையும் பற்றிப் பேசி முழுமை ஓவியத்தைக் காட்டுவார்கள், சிலர் பாட்டின் சொற்பொருளிலே ஆழ்ந்து அலசி நயங்களைக் காட்டுவார்கள். திரு ராகவன் இந்த இரண்டையுமே செய்வார். முழு உருவத்தைக் காட்டி அதன் அழகை உணர்த்தி அதன் அங்கங்களின் வேறுபாட்டையும் தனித்தன்மையையும் எடுத்துத் தெளியவைப்பார். மேல் நாட்டுக் காவிய கதியோடு வைத்து ஒப்பு நோக்கச் செய்வார். அவருடைய மேதை காரணமாக இந்த அற்புதத்தை அவரால் செய்ய முடிகிறது.

பிறருடைய பேச்சைக் கேட்டு ரசிப்பதிலும் அவர் சிறந்தவர். பல பேச்சாளர்களிடம் இந்தப் பண்பு இருப்பதில்லை. நன்றாக ஒருவர் பேசினால் அதை ரசிப்பதோடு நன்றாக இருந்தது என்று பாராட்டுவதில் அவர் சிறிதும் லோபத்தனம் காட்டுவதில்லை, அவருக்கு நன்றாக ரசிக்கவும் தெரியும்; ரசிக்க வைக்கவும் தெரியும்.

அவருடைய மேடைப் பேச்சு ஒரு காவியம்; அல்லது ஓர் அழகான ஓவியம்; அல்லது சாணையிட்ட வைரம்; அல்லது நல்ல சங்கீதக் கச்சேரி. அவருடைய உரையாடலோ அநுபவக் களஞ்சியம். குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்துத் தாமும் சிரித்துப் பேசுவார். தம்முடைய அநுபவங்களைச் சொல்லுவார். அவருக்கு நையாண்டி பண்ணத் தெரியும்; ஆனால் அந்த நையாண்டியில் அற்பத்தனமோ பொறாமையோ இராது; அதில் ஒரு பெருந்தன்மை இருக்கும். நையாண்டிக்கு ஆளானவரே அதை ரசித்துச் சிரிக்கலாம்!

கல்கத்தாவில் அவர் மேடைப் பேச்சைப் பெருங் கூட்டமாகக் கேட்டுச் சுவைத்தார்கள். மற்றச் சமயங்களில் அவர்களோடு உரையாடி இன்புறுவதைவிரும்பி அவருடன் எப்போதுமே ஒரு சிறு கூட்டம் இருந்து கொண்டிருக்கும். ஆங்கிலமும், தமிழும் அந்த உரையாடலை வெட்டிச் சிரிப்பை உண்டாக்கும்.

எங்கே போனாலும் அங்கங்கே உள்ள அன்பர்கள் இப்படித்தான் அவருடைய புலமையை அநுபவிப்பார்கள். அதனால்தான் பல ஊர்களில் எத்தனை தடவை அவர் சென்றாலும் திருப்தி உண்டாவதில்லை; ''கூப்பிட்டால் வர மாட்டேன் என்கிறாரே!'' என்று குறைப்பட்டுக் கொள்கிறார்கள்!

எழுத்தாளர் அ. சீ. ரா, கவிஞர் அ. சீ. ரா என்ற வகையில் அவரிடம் அமைந்திருக்கும் தகுதியை ஒரு கட்டுரையில் விளக்கி விட முடியாது. சுருக்கமாகச் சொன்னால் ஒன்று சொல்லலாம். அவர் பேசினாலும் கட்டுரை எழுதினாலும் அதில் தெளிவு இருக்கும்; இலக்கிய நயம் இருக்கும்; பல காலம் திரும்பத் திரும்பச் சிந்தித்துப்பார்க்கும் பயன் இருக்கும் இலக்கியப் படைப்புக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? ○



வள்ளல் பெருமானின் வளம் மிகுந்த கருத்துக்கள் உலக மக்கள் சமுதாயத்திற்கே தேவைப்படும் நிலை இன்று இருக்கிறது. நாம் வள்ளலாரின் கருத்துக்களைப் பரப்புவதற்கு எந்த அளவுக்குத் தகுதி பெற்றிருக்கிறோம் என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நா. மகாலிங்கம்,
பி.எஸ்ஸி; எம்.ஐ.இ

வள்ளலாரின் வாழ்வு நெறி

பருவமழை பெய்து வளம் தருவது போல, அருள் துறையிலும் பருவமழை பெய்து ஞானப்பயிர்களைச் செழிக்க வைப்பதுண்டு. 'தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரதத்தை வாழ்விக்க வந்த காந்தி' என்று மகாத்மா காந்தி அடிகள் தோன்றிய சூழ்நிலையைப் பாரதியார் பாடுகிறார். அத்தகைய சூழ்நிலையில் 1823-ம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 5-ம் நாள் சிதம்பரத்தை அடுத்த மருதூர் என்னும் சிற்றூரில் அருட்பிரகாச வள்ளலார் தோன்றி அருளினார்கள். அடிமை வாழ்வில் சிக்குண்டதோடு நம் மக்கள் வறுமை வாழ்விலும், வாடிக் கிடந்தனர். வறுமையிலும் அழுந்திக் கிடந்த அவர்களைச் சாதி, மதம் முதலிய வேறுபாடுகளும், பொய் நம்பிக்கைகளும், வாத வழக்குகளும் மேலும் வருத்தலாயின. அக்கால நிலையினையும், அன்று நிலவிய கொள்கையினையும் நம் வள்ளல் பெருமான்,

''பேருற்ற உலகிலுறு சமய
மத நெறியெலாம்
பேய் பிடிப்புற்ற பிச்சுப்
பிள்ளை விளையாட்டென
உணர்ந்திடா துயர்கள்
பல பேதமுற்றங்கு மிங்கும்
போருற்றிறந்து வீண்
போயினர்.''

''அகத்தே கறுத்துப் புறத்தே
வெளுத்திருந்த உலகர்''

''பன்னெறிச் சமயங்கள்
மதங்கள் என்றிடு
பவநெறி இதுவரை
பரவியது இதனால்
சென்னெறி அறிந்திலர்
இறந்திறந்துலகோர்
செறியிருள் அடைந்தனர்.''

''பித்தெலாம் உடைய
உலகர் தம் கலப் பிதற்று''

என்றெல்லாம் ஒருவாறு காட்டுகின்றார். இந்நிலையில் மக்கள் உடலும் உள்ளமும் உயிரும் உயர்வழியை எய்துதல் வேண்டும் என்று கருதினார்கள். உடல் வாழ்க்கைக்கு உணவு இன்றியமையாதது என்று பசியின் கொடுமைகளைப் படிப்பவர் மனம் உருக வரைந்து காட்டிப் பசிப்பிணியை நீக்க வேண்டியதைக் கூறியதோடு தாமே தருமச்சாலையையும் நிறுவினார்கள். மக்களின் துயரை நினைந்து கசிந்து உருகினார்கள்.

மண்ணுலகதிலே உயிர்கள் தாம்
வருந்தும் வருத்தத்தை ஒரு சிறிதெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக்
கேட்டும் கணமும் நான் சகித்திட மாட்டேன்.

இவ்வாறு மக்கள் துயரைக் கண்டு துயரப்பட்ட பெருமான் வள்ளலாரேயாவார். அவருடைய கொள்கைகளைப் பின்பற்ற விரும்பும் அன்பர்கள் நிறைய இருக்கின்றார்கள். ஆயின் அதிகமாக சித்தாந்த விசாரணை நடைபெறுகின்றது என்பது தவிர, அவர் தம் கருத்துக்களை மக்கள் நலம் அடையும் வகையில் இன்னும் செயல் பட நாம் வைக்கவில்லை.

வள்ளல் பெருமானின் வளம் மிக்கக் கருத்துக்கள் உலக மக்கள் சமுதாயத்திற்கே தேவைப்படும் நிலை இன்றுள்ளது. நாம் எவ்வளவு தூரம் அவற்றைப் பரப்புவதற்குத் தகுதி பெற்றுள்ளோம் என்றும் சிந்திக்க வேண்டு. 2000 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய யேசுநாதரின் வாழ்க்கை எவ்வளவு மக்களின் உயர்ந்த நோக்கங்களை உருவாக்கியுள்ளது என்று எண்ணிப் பார்த்தால், அதுபோன்று சமுதாய முன்னேற்றத்திற்கும் வாழ்க்கையை உபயோகப்படுத்தும் ஒரு தியாகப் பரம்பரையை உண்டாக்கினால்தான் பெருமானுடைய கருத்துக்கள் நிலை பெற்றுப் பரவும்.

சன்மார்க்க சங்கத்தில் ஈடுபட்டுள்ள அன்பர்கள் ஒவ்வொருவரும் எளிய அணில்பிள்ளை இராமபிரானுக்கு உதவியது போல, தங்கள் தங்கள் அளவுக்கேற்றபடி பரோபகாரம் செய்ய முயல வேண்டும். அதுவே சன்மார்க்க வாழ்க்கைக்கு வழிகாட்டியாகும். ○

திருச்சிற்றம்பலம்

அருட்சோதித் தெய்வமெனை
ஆண்டுகொண்ட தெய்வம்
அம்பலத்தே ஆடுகின்ற
ஆனந்தத் தெய்வம்
பொருட்சாரு மறைகளெல்லாம்
போற்றுகின்ற தெய்வம்
போதாந்தத் தெய்வம்உயர்
நாதாந்தத் தெய்வம்
இருட்பாடு நீக்கிஒளி
ஈந்தருளுந் தெய்வம்
எண்ணியநான் எண்ணியவா
றெனக்கருளுந் தெய்வம்
தெருட்பாடல் உவந்தெனையுஞ்
சிவமாக்குந் தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற
தெய்வமதே தெய்வம்

—திருவருட்பா



நல்லவர் நாகராஜனுக்கு, மன்னவர் மணலி
பொன்னுடை போர்த்துகிறார்!

சாதாரண நடிகர் என்ற நிலையிலிருந்து தமது விடா முயற்சிநிறைந்த உழைப்பினால் மாபெரும் டைரக்டராகவும் தயாரிப்பாளராகவும் உயர்ந்துள்ள திரு ஏ. பி. என், இடைக் காலத்தில் ஆண்டவனிடம் கொண்ட அளவிலா பக்தி காரண மாகச் சொல்லொண்ணு சோதனைகளுக்கு ஆளானுர்!

சம்பூரண இராமாயணம் படத்தை எடுப்பதற்கு முன்னு லேயே திரு ஏ. பி. என்னின் மனசில் பெரும் மாறுதல் ஏற் பட்டுவிட்டது. ஏற்கெனவே தமிழ் இலக்கியங்களிலும், தேவார திருவாசகங்களிலும் பெரும் ஈடுபாடு கொண்டவ ராதலால், சினிமா உலகித்தினிடையிலும் அவர் ஓர் அபூர்வ மனிதராக விளங்கி வந்தார்.

சம்பூரண இராமாயணம் தயாரானபோதே இவர் இராம பிரானிடம் உள்ளூரப் பாசம் மிகக் கொண்ட பக்த சிரேஷ்ட ராகிவிட்டார்.

அன்றைய தினமே இறைவன் அவரைச் சோதனை செய் யத் தீர்மானித்துவிட்டான். மிக உயர்ந்த நிலைக்குக் கஷ் டப்பட்டு ஏறிவந்த திரு ஏ. பி. என்னுக்கு எல்லாவிதமான கஷ்டங்களையும் ஆண்டவன் கொடுத்தான்.

அவருடைய படங்கள் சிலவற்றைத் தோல்வியுறச் செய் தான். அவர் சேகரித்திருந்த செல்வத்தை அவரிடமிருந்து ஓடச் செய்தான். 'கடன் பட்டவர் நெஞ்சம் போலக் கலங்கினுன் இலங்கை வேந்தன்' என்று கம்பர் சொல்லு கிருரே — அத்தகைய கலக்க நிலையை ஏற்படுத்தினுன். ஆனுல் அவனுல் அப்போதும் திரு ஏ. பி. என்னின் உள்ளத்தி லிருந்த உறுதியையும் அமைதியையும் பக்தியையும் விரட்டி யடிக்கச் செய்ய முடியவில்லை!

வாழ்வின் உச்ச நிலையில் இருந்தபோது எப்படித் திருநீறு அணிந்து எளிய உடையில் அறுபத்தைந்தாவது நாயன்மார் போல விளங்கி வந்தாரோ, அவ்வாறே கடும் சோதனைகள் வந்தபோதும், திரு ஏ. பி. என் கலங்காத உள்ளத்தின ராய், வாயில் தமிழும், தெய்வத் திருநாமமும் மணக்க உலாவி வந்தார். கடுமையாய் உழைத்து வந்தார்.

இறைவனுடைய திருவிளையாடல் முடிவுக்கு வந்தது. பல்வேறு மனிதர்கள் மூலமாக வந்து சோதித்த இறை வன், கடைசியில் தானே தன் குடும்பத்துடன் வந்து திரு ஏ. பி. என்னுக்கு உதவத் தொடங்கினுன்.

சிவபெருமானும், பார்வதியும், முருகனும், கணபதி யும் தங்கள் பூத கணங்களுடன் திரு ஏ. பி. என்னின் படங் களில் அற்புதமாக நடித்து, விஜய லட்சுமியின் பூரிபூரண கிருபா கடாட்சத்தை திரு ஏ. பி. என் மீது பொழியச்

பகீரதன்

செய்தார்கள். சிவபிரானே தம் பக்தனுக்கு உதவ வந்துவிட்ட பிறகு அவருடைய நாயன் மார்கள் வராமல் இருக்க முடியுமா? திருவருட்செல்வர்கள் நாலுபேர் வந்து நாலு திசையிலும் திரு ஏ. பி. என் புகழைப் பரப்பினர்கள்.

இப்போது திருமாலே புறப்பட்டு வருவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கிறர். இன்னும் யார் யார் வருவார்களோ சொல்ல முடியாது!

பகுத்தறிவுப் பிரசாரமும், நவ நாகரிக சந்தேக மனமும் மிகப் பெருத்துப்போன ஒரு கால கட்டத்தில்—டைட் பாண்டும் ஜீன் நடன மோகமும் தலைவிரித்தாடுகிறநாளில்—புராண இதிகாசங்கள் எல்லாம் பரிகாசத்துக்குரிய பண்டமாகி விட்டிருக்கிற இந்த யுகத்தில்—பரம பக்தர்கூடக் கோயில் முன் கை எடுத்துக் கும்பிடுவதற்கு முன்னல் நாலாபுறமும் பார்த்துக்கொள்கிற கலியில்—

திரு ஏ. பி. என், தைரியமாக எடுத்து வெளியிட்டு வரும் புராணப் படங்கள் மக்களிடையே மகத்தான ஆதரவைப் பெற்று நூறு நாட்களுக்கு மேலும் ஓடுகின்றன என்றல் அது இறைவனின் திருவிளையாடலைத் தவிர வேறு என்னவாக இருக்க முடியும்!

வேறு ஏதாவது ஒரு காரணம் இருக்கக்கூடுமானல், அது திரு ஏ. பி. என், அல்லும் பகலும் மனதில் போற்றிப் பேணிவரும் தமிழ் மொழியாகத்தான் இருக்கக் கூடும். திரு ஏ. பி. என்னின் படங்களில் எல்லாம் கணீர் கணீர் என்று ஒலிக்கும் ஞானத்தமிழ், மனிதர்களை வாழ வைக்கும் சக்தியையும் படைத்தது அல்லவா!

இந்த யுகத்தின் மிகச் சக்திவாய்ந்த பிரசார சாதனமான சினிமாவை மனித குலத்தின் ஆன்மீக மேம்பாட்டுக்காக அற்புதமாகப் பயன்படுத்தியவர்களுக்கு நோபல் பரிசு கொடுப்பதென்று இருந்தால், அதைச் சற்றும் தயக்கமின்றி டைரக்டர் ஏ. பி. நாகராஜனுக்கு மேள தாளத்துடன் கொடுக்கலாம்.

நோபல் பரிசை அம்மாதிரி ஆன்மீக விஷயங்களுக்குக் கொடுக்க 'விதிகள்' இல்லையாதலால், தமிழ் கூறும் நல்லுலகமானது சென்ற வாரம், மயிலாப்பூரில் திரு ஏ. பி. நாகராஜன் அவர்களுக்கு 'தெய்வ நெறிக் கலைஞர்' என்ற பட்டம் கொடுத்துக் கௌரவித்தது.

உலகிலேயே மக்கள் அனைவரும் ஒப்புக்கொள்ளக் கூடிய கதை, விரும்பிப் படிக்கக்கூடிய கதை, அந்தந்த நாட்டு மக்களின் புராணக் கதைகள்தாம். அப்படிப்பட்ட புராணங்களை மக்கள் விரும்பிக் கிரகிக்கும் வண்ணம் படம் எடுப்பது என்பது இலேசான காரியமா?

ப
க்
த
ரி
க
ளி

மேல்நாடுகளில் இப்படிப்பட்ட படம் எடுத்தவர்களை அரசாங்கத்தார் 'ஸர்' பட்டம் போன்ற கௌரவப் பட்டம் கொடுத்துக் கௌரவிப்பார்கள். அவர்களுக்கு அந்நாட்டில் பெரிய அந்தஸ்து உண்டு.

தமிழ்நாட்டில் படத்தொழில் எவ்வளவோ ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. எத்தனையோ முன்னேற்றம் அடைந்திருக்கிறது. ஆயினும் புராணப் படங்களை ஜனரஞ்சகமாக எடுத்து யாரும் வெற்றி பெற்றதில்லை. இந்த மகத்தான காரியத்தை மிகச் சிறப்பாக ஆற்றியவர் திரு ஏ. பி. நாகராஜன்.

அவருடைய முயற்சியைப் பாராட்டுவதற்குப் பதிலாக ஒருசில ஆத்திக வேடதாரிகள், புராணப் படத்தை மாற்றி விட்டார் என்று குறை கூறியதும் உண்டு. அத்தகைய அறிவிலிகளை மன்னிப்போம்

இதுபோன்ற நல்ல தொண்டைப் பாராட்ட வேண்டுமென்று ஒரே ஒருவர்தான் துணிந்து வந்து நின்றார். தாம் தனிப்பட்ட முறையில் பாராட்டினால் போதாது என்று தாம் சேர்மனாக இருக்கும் தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் சென்னை மாவட்டக் கிளையினரைக் கொண்டு திரு ஏ. பி. என் அவர்களைப் பாராட்டத் திட்டமிட்டார். அதன் படியே சென்ற மாதம் 25-ந் தேதி 'தெய்வ நெறிக் கலைஞர்' என்று திரு ஏ. பி. நாகராஜனுக்குப் பட்டம் வழங்கி அவருக்குப் பொன்னாடை போர்த்து மகிழ்வித்தார். மகிழ்ந்தார்.

யார் அந்த உத்தம மனிதர் என்று நேயர்கள் இதற்குள் ஊகித்திருப்பார்கள். அவர்தான் சென்ற ஐந்நூறு ஆண்டுகளாகத் தெய்வத் தமிழ்நாட்டில் தெய்வ நெறியை; நெறியாக வளர்த்து வரும் மணலி குடும்பத்தின் இன்றையத் தலைவரான திரு மணலி இராமகிருஷ்ண முதலியார்.

சென்னை, மயிலாப்பூர் கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்ற இந்தப் பாராட்டு விழாவில் உயர் நீதிமன்ற நீதிபதி திரு ஆர். சதாசிவம், இந்து சமய அறநெறித் துறை ஆணையாளர் திரு ஏ. இராதாகிருஷ்ணன், துணை ஆணையாளர் திரு ஏ. சிதம்பரம், திருவாளர்கள் எஸ். எஸ். வாசன், ஜெமினி கணேசன், ஜெய்சங்கர், ஏ. எல். சீனிவாசன், ம, பொ. சிவஞானம், டி. கே. ஷண்முகம், மார்க்கண்டவேல் ராஜன், திருமதி சௌந்தரம் கைலாசம், திருமதி பத்மினி ஆகியோர் திரு ஏ. பி. என் அவர்களின் அறநெறிப் பணியைப் பாராட்டிப் பேசினார்கள்.

இந்து சமயத் தமிழ் பெருமக்கள் சார்பில் திரு மணலி இராமகிருஷ்ண முதலியாருக்குப் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தீமையானவற்றை மறந்து விட நமது மனதை வேறு திசையில் திருப்பிவிட வேண்டும்.

மறந்து போ நெஞ்சே!

வெ. சுப்புராம மூர்த்தி

மனித வாழ்வில் எத்தனையோ சம்பவங்கள் நடக்கின்றன. ஒவ்வொன்றையும் அவன் ஞாபகத்தில் வைத்துக் கொள்கின்றானா? இல்லை. சிலவற்றை ஞாபகம் வைத்துக்கொள்கிறான். சிலவற்றை மறந்து விடுகிறான்.

மனிதர்களில் சிலருக்கு நல்ல ஞாபக சக்தி உண்டு. சிலருக்கோ அதிக மறதி. சில விஷயங்களை அடியோடு மறந்து விடுவது நல்லதுதான். ஆனால் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய விஷயங்களை மறந்து விட்டு, மறக்க வேண்டிய விஷயங்களை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நல்லதல்ல. இதனால் உலகத்தில் எத்தனையோ சங்கடங்கள் நேருகின்றன. பொதுவாகப் பல விஷயங்களை நாம் மறந்து விடுகிறோம். சில துன்பம் தரும் நினைவுகளை நம் மனதை விட்டு அகற்றிவிட முடியாது. அதே மாதிரி மகிழ்ச்சி தரும் எண்ணங்களையும் மறக்க முடியாது. பழைய துன்பம் தரும் நிகழ்ச்சிகளை மறந்துவிட வேண்டும். அதையே நினைத்துக் கொண்டிருந்தால் கோபம், ஆத்திரம் எல்லாம் வரும்.

முன்னே நமக்குத் தீங்கு செய்தவர்கள் மேல் கோபம், பழி வாங்கும் நினைப்பு எல்லாம் இருக்கும். பொதுவாக இக்குணம் எல்லாரிடமும் காணப்படுகிறது. இதை நியாயம் என்று சொல்லுவதற்கு இல்லை. சிலர் 'நடந்து போனதைத் தங்களால் மறக்க முடியவில்லையே?' என்று சொல்லலாம். இது தான் தவறு. மறக்க வைக்கும் திடம் நம் மனதுக்கு இல்லையே எனச் சிலர் நினைக்கலாம். ஆனால் நம் விருப்பத்திற்கு ஏற்ப நம் மனதைப் பழக்க முடியும். முயன்றால் முடியாததொன்றில்லை.

'இம்மான்யுவல் காண்ட்' என்ற அறிஞரிடம் 'லாம்ப்' என்ற வேலையாள் பல வருடங்கள் பணியாற்றி வந்தான். அவர் அவனை நம்பி எல்லாப் பொறுப்பையும் அவனிடமே விட்டிருந்தார். ஒரு நாள் அவன் அத்தனை நாட்களாகத் தன்னை ஏமாற்றிப் பணம் பறித்து வந்ததை அவர் அறிந்தார். உடனே அவனை வேலையை விட்டு நீக்கிவிட்டார். ஆனாலும் அவனை அவரால் மறக்க முடியவில்லை. அவருடைய நாட்குறிப்பில் 'மனமே லாம்பை மறந்து விடு' என்று எழுதி வைத்திருந்தார்!

ஒரு விஷயத்தை நாம் ஞாபகப் படுத்திக் கொள்ள எவ்வளவு முயற்சி செய்கிறோமோ அதே

போல மறக்கவும் முயற்சி செய்ய வேண்டும். பழைய சம்பவங்கள் மனக் கண் முன்னால் வந்தால் அவைகளை மறக்கவே முடியாது. தீமையான நினைவுகள் மனக்கண் முன் வந்தால் உடனே அந் நினைவை நீக்கி மனதை வேறு திசையில் திருப்ப வேண்டும். வேறு திசையில் திருப்ப ஏதாவது ஒரு புதிய விஷயத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். அவ் விஷயம் நம் மனதைக் கவரக்கூடியதாக இருக்க வேண்டும். இம்மாதிரி யான புதிய நினைவுகள் நம் மன தைக் கவர்வதால் பழைய கெட்ட நினைவுகள் மறந்து விடு கின்றன. பழைய வேண்டாத நினைவுகளை மறக்கச் சில வழிகளை மேற் கொள்ளலாம். பலரோடு கூடி விளையாடுதல், கவிதை இயற்றுதல், ரேஸில் ஜெயித்து விடுவதாக மனக் கோட்டை கட்டுதல் ஆகியவற்றால் பழைய நினைவுகளை மறந்து விடலாம்.

பழைய கெட்ட நினைவுகளை மறந்துவிட வேண்டும், மறந்து விட வேண்டும் என்று பிரார்த் தனை செய்து கொண்டிருந்தால் பழைய கெட்ட நினைவுகள் மன தில் இருந்து கொண்டே இருக் கும். அதற்குப் பதிலாக மனதில் அமைதியும், அன்பும் வேண்டு மென்று பிரார்த்திப்பது நல்லது. நடந்ததை மறந்து விடுவதுதான் இயற்கையின் விதி. ஆகவே இப் படிச் செய்வதால் ஒன்றும் தவ றில்லை. கொஞ்சம் கொஞ்சமாக மனதை விட்டுத் தீய நினைவுகளை விலக்கி வந்தால் நாளடைவில் அதன் வன்மை குன்றிவிடும். அப் படியே எப்போதாவது ஒரு சம யம் அவைகள் நம் நினைவில் வந் தாலும் கோப தாபம் எதுவும் ஏற்படாது.

நாம் செய்த தவறுகளை அவை களுக்குப் பரிகாரம் செய்யாமலே மறந்து விடுதல் சாத்தியமில்லை. யாரையாவது அடித்திருந் தாலோ அல்லது கோபப்பட்டுத் திட்டியிருந்தாலோ, 'தவறு செய்துவிட்டேன்' என்று மன் னிப்புக் கேட்டுக் கொண்டு விட் டால் போதும். மனம் அமைதி பெற்று விடும். பழைய நினைவு அகன்றுவிடும்.

அமெரிக்காவிலே 'லாங்ஸ் டர்' என்ற பாதிரியார் கிறிஸ்து மஸ் வாழ்த்துக்கள் அனுப்பிக் கொண்டிருந்தார். அப்போது அருகிலிருந்த நண்பர் ஒருவர் 'என்ன இவருக்கும் வாழ்த்து அனுப்புகிறீர்களா?' என்றார். பாதிரியாருக்கும் அந்த ஆளுக் கும் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சச்சரவு நடந்திருந்தது. அதனாலேயே நண்பர் அப்படிக் கேட்டார். சச்சரவை மறந்து விடவேண்டும் என்பது பாதிரி யார் கருத்து. ஆகவே, வாழ்த்துக் களைத் தபாலில் சேர்த்துவிட்டே அமைதி கண்டார்!

இம்மாதிரிக் கெட்ட நினைவுகளை நாம் மறந்து விடவேண்டும். நல்ல நினைவுகளை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். சற்றுக் கடினந்தான் என்றாலும் நாளடைவில் சரியாய் விடும்.

✿

நமது மனம் நமக்கு வசமாக வேண்டும். எவ்வளவோ காலமாகத் தீவிரமாக வேலை செய்து கொண்டிருந்த மன தைத் தன்னுள் அடக்கச் சிறிது சிறிதாகவே முயற்சி செய்ய வேண்டும். மனம் அடங்கிவிட்டால் நமக்கு வேறொன்றும் தேவையில்லை.

—ஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சாரியார்

கம்ப இராமாயணத்தில் பக்திச் சுவை

மாயாவி

இராமாயண காவியத்தை முதன் முதலில் வடமொழியில் இயற்றிய வால்மீகி முனிவர் தம் காப்பிய நாயகன், கடவுளின் அவதாரம் என்று ஆங்காங்குக் காட்டிவந்த போதிலும், பெரும் பாலும் அவரை மானுடரில் ஓர் உத்தம புருஷனாகவே வருணித்துச் செல்கிறார். ஆனால், அதன் பின் பலகாலம் இடைவெளி விட்டுத் தம் இராம காதையைத் தீந்தமிழில் இயற்றிய கம்பநாட்டாழ்வாரோ, இராமனை உத்தம புருஷனாக மட்டும் இன்றிக் கடவுளின் அவதாரமாகவும், வழிபடும் தெய்வமாகவும் உருவாக்கித் தந்துள்ளார். அவதார மூர்த்தியாகிய இராமனைப் பற்றிக் கூறும் இடங்களில் எல்லாம், கம்பர் பக்திச்சுவை வெளிப்படப் பரவசமும் உள்ள நெகிழ்வும் கொண்டே பாடுகிறார்.

முப்பரம் பொருளுக்குள் முதலை, மூலத்தை,
இப்பரம் துடைத்தவர் எய்தும் இன்பத்தை,
அப்பனை, அப்பினுள், அமிர் தம் தன்னையே
ஒப்பனை, ஒப்பனை உரைக்க ஒண்ணுமோ?

என்று 'மணக்கோலம் கொள்ளும் இராமனை வர்ணிக்கவும் இயலுமோ?' என்று வர்ணிக்கும் இந்தப் பாடலில், தம் காப்பிய நாயகனை ஹரி, ஹரன், அயன் ஆகிய மூவரிலும் முதல் வைத்துக் காட்டுகிறார்.

அவ்வாறே தம் காப்பியத்தில் வரும் பிற பாத்திரங்களையும் அவர், இராமபிரானைத் தெய்வமாக வழிபடச் செய்திருக்கிறார்.

கிஷ்கிந்தா காண்டத்தில், வாலி வதைப்படலத்தில் இறக்கு முன் வாலி தன்மீது எய்யப்பட்ட அம்பில் இராம நாமம் பொறிக்கப்பட்டிருப்பதைக் காண்கிறான். அதைக் கூறும்போது கவிஞர் பெருமான் பாடுகிறார்:

மும்மைசால் உலகுக்கெல் லாம் மூல மந்திரத்தை, மற்றும்
தம்மையே தமக்கு நல்கும் தனிப்பெரும் பதத்தைத்தானே,
இம்மையே எழுமைநோய்க் கும் மருந்தினை இராமனென்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக் கண்களில் தெரியக் கண்டான்.

இராமனின் நாமத்தைக் கண்டதும் இறக்கும் நிலையிலிருந்த வாலி மெய்யுணர்வு பெறுகிறான். கண்கூடான பரம்பொருளைச்

இராமனைப் பற்றிக் கூறும் இடத்திலெல்லாம் அவன் தெய்வம்—தெய்வம் என்று நமக்கு உணர்த்தித் தம் உள்ளத்தில் சுரந்த அதே பக்தி வெள்ளத்தை நம் உள்ளத்திலும் சுரக்க வைக்கிறார் கவி கம்ப நாடர்.

சரணடைவதாக அவன் கூறுகிறான்.

ஏவுகூர் வாளியால் எய்து
நாய் அடியனேன்
ஆவிபோம் வேலைவாய் அறி
வுதந் தருளினாய்,
மூவர் நீ,முதல்வன் நீ, முற்று
நீ மற்றும் நீ
பாவ நீ, தரும நீ, பகையுநீ,
உறவுநீ......

என்று அவன் இராமனைத் துதி பாடுவதாக அமைந்துள்ளபாடல் நம் உள்ளத்தைக் குழைவிக்கின்றது.

வாலி இத்துடன் நின்றுவிடுகிறானா? இல்லை. தன் மெய்யுணர்வை மைந்தன் அங்கதனுக்கும் உணர்த்தி, நீயும் அவனைச் சரணடைந்து உய்ய வேண்டும் என்று கூறுகிறான்.

பாலமைதவிர் நீ, என்சொல்
பற்றுதியாயின், தன்னின்
மேல் ஒருபொருளும் இல்லா
மெய்ப்பொருள், வில்லுந் தாங்கி
கால் தரை தோய நின்று
கண்ணுக்கும் எளியன் ஆனான்;
மால்தரும் பிறவி நோய்க்கு
மருந்தென வணங்கு மைந்த!

''தனக்கு மேலான பொருளே இல்லாத முழுமுதற் பொருள், மானுட வடிவம்கொண்டு, வில் தாங்கி, கால் தரையில்பட மக்கள் கண்களுக்குப் புலப்படும் படிக் காட்சியளிக்கிறான். அவனை வணங்கி உன் பிறவிப்பிணியைப் போக்கிக் கொள்'' என்று வாலி தன் மைந்தனுக்கு உபதேசிப்பது போல் அமைந்துள்ள இந்தப் பாடல் மூலம்,கவிஞர் பெருமான் நம்மையும் அதே வழியைப் பின்பற்றி உய்யுமாறு அழைக்கவில்லையா?

இராமனாகிய வேத முதல்வனை, மும்மூர்த்திகளுக்கும் உயர்ந்த தத்துவமாகவும், எங்கும் கலந்து நிற்கும் பரம்பொருளாகவும் சித்திரிக்கின்றார் கம்பநாடர். அயோத்தியா காண்டத்தின் கடவுள் வாழ்த்துப்பாடலிலேயே அவர், இராமனென்ற தத்துவம் பஞ்ச பூதங்களிலும் நிறைந்திருப்பதாகவும், எனவே அப்பூதங்களாகிய உலகின் உள்ளும்புறமும் அதன் உயிராகவும், உணர்வாகவும்பரவிநிற்பதாகவிளக்குகிறார்.

வானின்றிழிந்து வரம்பிகந்த
மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனும் உயிரும் உணர்வும்
போல் உள்ளும் புறத்தும்
உளனென்ப
கூனும் சிறிய கோத்தாயும்
கொடுமை யிழைப்பக் கோல்
துறந்து
கானும் கடலும் கலந்திமை
யோர் இடுக்கண் தீர்த்த
கழல் வேந்தே

இராம காதையில் பக்திச் சுவையைப் புகுத்துகையில் கவிஞர் பெருமான், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் பக்தி நயத்தைக்கூட எதிரொலிக்கச் செய்கிறார்.

உம்பரால் முனிவரால்
யோகரால் உயர்
இம்பரால் பிணிக்க ரும்
இராம வேழஞ் சேர்
கம்பராம் புலவர்......

என்ற பாயிரத்தின்படி, தேவர்களாலும் ஏனையோராலும் பிணிக்க முடியா இராகவ குஞ்சரம்தானே வந்து கம்பராகிய கட்டுத்தறியில் பிணிப்புண்டதாம்.

உபநிடதப் பொருள்களையும் கம்பர் தம் காவியங்களில் ஆங்காங்குக் கலக்க விட்டிருக்கிறார். விராதன் எனும் அரக்கன் இராமனால் வீழ்த்தப்பட்டுத் தன் முன்னுருவத்தைப் பெற்றபோது கூறுகிறான்.

தாய்தன்னை அறியாத கன்
றில்லை; தன் கன்றை

யாயும் அறியும்; உலகின்
தாயாகின் ஐய,
நீ அறிதி எப்பொருளும்;
அவை உன்னை நிலை அறியா
மாயை இது என்கொலோ?
வாராதே வரவல்லாய்!

தன் தாயை அறியாத கன்றும் இல்லை; தன் கன்றை அறியாத தாயும் இல்லை. அப்படியிருக்க, தாயாகிய இறைவன் தன் மக்களாகிய ஜீவராசிகளை அறிந்திருக்கும்போது, அவை மட்டும் ஏன் அவனை அறிவதில்லை?

இது என்ன மாயம்?

'கடவுள் மனிதரின் ஊனக் கண்ணுக்குப் புலப்படாமல் ஞானக் கண்ணுக்கே புலப்படுவான்; உலகத்துடன் தொடர்பின்றி அதனுள் நடப்பான்; ஆதலால், பக்தர் முன் வராமலே வரும் மாயம் அவனுக்கு உண்டு' என்பது வேதாந்த தத்துவம்.

இந்தத் தத்துவத்தைத்தான் விராதன் வாயிலாக வெளியிடும் பாடலில் உரைத்திருக்கிறார் கம்பர். அது மட்டுமா? ''வாரா தாய் போலே வரவல்லாய்'' என்று நம்மாழ்வார் பயன்படுத்தியுள்ள சொற்றொடரைக் கூட அவர் இந்தப் பாடலில் அப்படியே கொடுத்திருக்கின்றார்.

இவ்வாறே, ''தொல்லை மூலப் பரஞ்சுடர்'' ''கருமுகில் கொழுந்து எழில் காட்டும் ஜோதி'' ''அறிவினும் பரான்'' ''திருவின் கேள்வன்'' என்று இராமனைப் பற்றிக் கூறும் இடத்திலெல்லாம் அவன் தெய்வம்—தெய்வம் என்று நமக்கு உணர்த்தித் தம் உள்ளத்தில் சுரந்த அதே பக்தி வெள்ளத்தை நம் உள்ளத்திலும் சுரக்க வைக்கிறார் மகாகவி கம்பநாடர்!